விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 22 வியாழக்கிழமை (08.10.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 294

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## ஆடைத் தொழிற்சாலையில் நேற்றும் 196 பேருக்கு தொற்று உறுதி

### 1028 ஆக தொற்றாளர்கள் உயர்வு

(கொழும்பு)
கம்பஹா மினுவாங்கொட கொரோனா தொற்று கொத்தணியில் மேலும் 196 பேருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதையடுத்து, கடந்த மூன்றரை நாட்களில் மினுவாங்கொட தொற்றுப் பகுதியில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ள தொற்றாளர்களின் ▶23

## திட்டமிட்ட திகதிகளில் பரீட்சை நடைபெறும்

### கல்வி அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)
க.பொ.த உயர்தரம் மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை என்பன ஏலவே தீர்மானிக்கப்பட்ட தினத்தில் நடைபெறும் என கல்வி ▶23

## அபாய கட்டத்தில் இலங்கை

# கொரோனா பரவல் பாரிய அச்சுறுத்தலே

### தொற்றாளர்கள் அதிகரித்தால் ஊரடங்கு பிறப்பிக்கப்படும் - சுகாதார அமைச்சர்



(கொழும்பு)
இலங்கையில் கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாம் அலை உருவாகியுள்ளதால் அது நாட்டுக்கு பாரிய அச்சுறுத்தலான ஒன்று என தெரிவித்துள்ள சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி நாட்டில் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்தால் ஊரடங்கு பிறப்பிக்கப்படும் என்று தெரிவித்தார். (05ஆம் பக்கம் பார்க்க)

## கம்பஹாவில் மருத்துவருக்கும் கொரோனா

(கொழும்பு)
கம்பஹா பொது வைத்திய சாலையில் பணியாற்றும் மருத்துவர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கம்பஹா, மினு ▶23

## தற்போது கண்டுபிடிக்கப்பட்ட வைரஸ் செறிவு அதிகமானது

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

09ஆம் பக்கம் பார்க்க

## கல்கந்த தனிமைப்படுத்தல் மையத்தில் பெண் உயிரிழப்பு

### கொரோனாவா என சந்தேகம்?

(கொழும்பு)
கல்கந்த தனிமைப்படுத்தப் படுத்தல் மையத்தில் அனுமதிக்கப்பட்ட பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யக்கலவைச் சேர்ந்த 64 வயதான பெண்ணொருவரே உயிரிழந்துள்ளார்.

அந்த பெண்ணின் ▶23

## காணாமல் ஆக்கப்பட்ட மகனைத் தேடியலைந்த தாய் வவுனியாவில் மரணம்

(வவுனியா)
வவுனியாவில் காணாமல் போன தனது மகனைத் தேடி வந்த தாய் ஒருவர் சுகவீனம் காரணமாக மரணமடைந்துள்ளார்.

வவுனியா மகாறம் பைக்குளம் பகுதியை ▶23

## இலங்கை பௌத்த நாடு என்பதை ஏற்க முடியாது

### எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு

(கொழும்பு)
இலங்கையை பௌத்த நாடு என்பதை தான் ஏற்றுக் கொள்ளவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ▶23

## பிறந்தநாள் கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட 384 பேர் யாழ்.புங்குடுதீவில் நேற்று தனிமைப்படுத்தப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)
மினுவாங்கொட ஆடை தொழிற்சாலையில் பணியாற்றிய நிலையில் யாழ்.புங்குடுதீவுக்கு 30ஆம் திகதி வந்த பெண்ணுடன் பிறந்தநாள் நிகழ்வில் கலந்து கொண்ட 384 பேர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தனி ▶23

## யாழில் நேற்றும் 213 பேருக்கு கொரோனா பரிசோதனை



### எவருக்கும் தொற்றில்லை

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் ஆய்வு கூடத்தில் நேற்றுப் புதன்கிழமை 213 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அவர்களில் எவருக்கும் கொரோனாத் தொற்றில்லை என உறுதி செய்யப்பட்டுள்ள ▶23

## கூட்டமைப்பின் பேச்சாளரை தெரிவு செய்வதில் குழப்பம்

### கூட்டத்தை ஒத்திவைத்த சம்பந்தன்

(யாழ்ப்பாணம்)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரைத் தெரிவு செய்யும் பாராளுமன்றக் குழுக் கூட்டம் இணக்கப்பாடு இன்மையால் அதன் தலைவர் இரா.சம்பந்தனால் காலவரையறையின்றி ஒத்திவைக்கப் ▶23

## யாழ்.ஓட்டுமடத்தில் வாள்வெட்டுக்குழு அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)
யாழ்.ஓட்டுமடம் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த வாள்வெட்டுக் குழு வீட்டின் மீது தாக்குதல் நடத்தி விட்டு தப்பிச் சென் ▶23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலை சீராக இயங்க அரசு உதவ வேண்டும்

## பாராளுமன்றில் கஜேந்திரகுமார் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**கடந்த கால யுத்தம் காரணமாக குண்டுத்தாக்குதல்களினால் ஏற்பட்ட இரசாயனத் தாக்கங்களினால் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை வடமாகாணத்தில் மிக அதிகமாக உள்ள நிலையில் அங்குள்ள தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலையை சீராக இயக்க அரசு நிதி உதவி வழங்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று பாராளுமன்றில் வலியுறுத்தினார்.**



நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி, பொருளாதார சேவைகள் வரி, துறைமுக விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்ட மூலம் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான ஐந்து பிரேரணைகள் மீதான விவாதத்தின் போது உரையாற்றிய போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

அவரது உரையின் விபரம் வருமாறு.

கோவிட் 19 வைரஸ் தொற்றானது அதிதீவிரமாக பரவும் இந்த வேளையில் அதனைக் கட்டுப்படுத்த அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டிய தேவை உள்ளமையை நாம் உணர்கின்றோம்.

கோவிட் 19 வைரஸ் பிரச்சினையின் பின்னணியுடன் பார்க்கும்போது அபிவிருத்தி என்னும் விடயத்தில் சுகாதார முன்னேற்றம் என்பது அதிகூடிய முக்கியத்துவம் பெறுகின்றது. அந்த வகையில் சுகாதாரத்தை மேம்படுத்தலின் முக்கியத்துவம் கருதி நான் முக்கிய விடயம் ஒன்றினை பதிவு செய்ய விரும்புகின்றேன்.

கோவிட் 19 வைரஸ் தாக்கத்தினால் இலகுவாகப் பாதிக்கப்படக் கூடியவர்களாக புற்றுநோயாளர்களும் உள்ளனர். கடந்த கால யுத்தம் காரணமாக குண்டுத் தாக்குதல்களினால் ஏற்பட்ட இரசாயன தாக்கங்களினால் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை வடமாகாணத்தில் மிக அதிகமாக உள்ளது.

அவ்வாறு புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்கும் நிலையமாக உள்ள தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலை தொடர்பில் குறிப்பிட விரும்புகின்றேன்.

தெல்லிப்பளை வைத்தியசாலையில் புற்றுநோய் பிரிவை உருவாக்குவதற்கு எனது குடும்பத்தின் பங்களிப்பு கூடுதலாக இருந்தது. புற்றுநோய் பிரிவுக்குரிய கட்டடம் மற்றும் அதற்குரிய கோபோல்ற் இயந்திரத்தினையும் எமது குடும்பம் வழங்கியிருந்தது.

குறித்த புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு யுத்தத்தின் முன்னரும், பின்னரும் யாழ்ப்பாணம் மற்றும் வடக்கு மாகாணத்தில் மட்டுமல்ல அதற்கு அப்பாலுள்ள மக்களும் சிகிச்சை பெறும் நிலையமாக விளங்கியது. மகரகம போன்ற தொலை தூரங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்குச் செல்ல வசதியற்ற பெருந்தொகையான நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் சேவையை இந்த வைத்தியசாலை வழங்கி வந்துள்ளது.

இந்த நிலையில் மாகாண சபையின் கீழ் இயங்கும் இந்த புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு முழுமையாக இயங்குவதற்குத் தேவையான ஆளணிவளம் 2018 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. ஆனாலும் அந்தப் பதவிகளுக்கான ஆட்கள் நியமிக்கப்படவில்லை.

மாறாக மத்திய அரசின் கீழ் இயங்கும் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அந்த ஆளணியை நியமித்து அவர்களை தெல்லிப்பளை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் பணியாற்ற அனுமதித்தனர்.

இச்செயற்பாட்டின் காரணமாக மத்திய அரசின் கீழ் கடமையாற்றும் வைத்திய அதிகாரிகள் மாகாண அமைச்சின் கீழ் இயங்கும் வைத்தியசாலையில் வேலை செய்யும் நிலை ஏற்பட்டது. இதனால் குழப்ப நிலைகள் உருவாகியது. இவ்வாறான முரண்பாடுகளால் நோயாளர்கள் மோசமாகப் பாதிக்கப்படும் நிலை தொடர்கின்றது.

இது மட்டுமன்றி தெல்லிப்பளை வைத்தியசாலையில் கோபோல்ற் இயந்திரம் மற்றும் லீனியர் அச்சிலறேற்ரர் இயந்திரம் ஆகியன உள்ளன. அதனால் ஏனைய மாகாணங்களிலுள்ள மாகாண புற்றுநோய் வைத்தியசாலைகளை விடவும் கூடுதலான நிதிச் செலவு ஏற்படுகின்றது. எனினும் அந்த நிதித் தேவையை மாகாண அரசினால் ஈடுசெய்ய முடியாதுள்ளது. மாகாண அரசின் கீழுள்ள இந்த வைத்தியசாலைக்குத் தேவையான செலவுகளை ஈடுசெய்வதற்குத் தேவையான நிதியை மத்திய அரசு வழங்குவதில்லை.

ஒரு புறத்தில் மாகாண நிர்வாகத்தின் கீழுள்ள மேற்படி புற்றுநோய் சிகிச்சை பிரிவை நிர்வகிப்பதற்குத் தேவையான நிதியை வழங்காது மறுபுறத்தில் அந்தப் பிரிவை மத்திய அரசின் கீழ் கொண்டு வந்தால் அதனை அபிவிருத்தி செய்ய முடியும் என்று கூறி அதனை மத்தியின் கீழ் கொண்டு செல்ல அரசு முயற்சிக்கின்றது.

ஆனால் இந்த புற்றுநோய் சிகிச்சை பிரிவை மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு செல்வது பொருத்தமற்றது.

குறிப்பாக புற்றுநோய் சிகிச்சைப் பிரிவையும், உளநல சிகிச்சைப் பிரிவையும் மத்தியின் கீழ் கொண்டு செல்வதற்கு அரசு முயற்சிக்கின்றது. இவ்வாறு இவை இரண்டையும் மத்தியின் கீழ கொண்டு செல்வதன் மூலம் நிர்வாக ரீதியான சிக்கல்கள் மேலும் உக்கிரமடையும். எனவே அநாவசியமான பிரச்சினைகளை உருவாக்காமல் அதுவும் கோவிட் 19 வைரஸ் நெருக்கடியுள்ள இக்கால கட்டத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் நலன்களை கருத்திற் கொண்டு குறித்த புற்றுநோய் சிகிச்சைப் பிரிவானது தொடர்ந்தும் மாகாண நிர்வாகத்தின் கீழ் இருக்கக் கூடியதாக அதற்குத் தேவையான ஆளணி மற்றும் நிதி வசதிகளை வழங்கி அதன் சேவையை மேம்படுத்த அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன் என்றார். (ம-03)

**Fixing of Advertisement boards at the backside of newly constructed bus stand at Muneeswaran road, Jaffna**

Jaffna Municipal Council is expected from interested bidders to fix the advertisement board with their own expenditure at the above mentioned location. Interested period to this project is up to three years from the date of fixing.

Altogether eight (08) spaces are available to fix the advertisement boards at the particular newly constructed bus stand. The size of the advertisement board may be **15 feet x 7 feet** or more, depending of the site condition. Prior approvals should have to be obtained by the successful bidder from the JMC administration before implement any site activities at the particular site. In addition to that created advertisement board should be properly maintained by the successful bidder up to the specified period.

In these connections, interested bidders are kindly requested to submit their proposal along with the annual offers to JMC through the self-prepared sealed document **on or before 22.10.2020.** The selection based on the amount of offer and other benefits given by the bidder to the JMC. The terms and conditions of JMC are applicable in all steps under these selection processes.

**The Chairman,**
**Procurement Committee,**
**Jaffna Municipal Council,**
**Jaffna.**
**021-222 2275**

(C-489)

**06.10.2020**

# நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினராக பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினராக கொக்குவிலைச் சேர்ந்த விநாயகமூர்த்தி ஞானேந்திரன் கடந்த 6ஆம் திகதி பதவியேற்றுக் கொண்டார்.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தில் சுயேட்சைக் குழுவில் போட்டியிட்டு கிடைக்கப்பெற்ற சுழற்சிமுறை ஆசனப்பதவி அடிப்படையில் உறுப்பினராக பதவியேற்ற விநாயகமூர்த்தி ஞானேந்திரன் கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழைய மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று நல்லூர் பிரதேச சபையின் சுயேட்சைக்குழு உறுப்பினராக இருந்த மேவின் றொசான் தனது பதவியை இராஜினாமா செய்திருந்தமை தெரிந்ததே. (ம - 03)

# ஒலிபெருக்கி மூலம் விழிப்புணர்வு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை யை கருத்திற் கொண்டு யாழ்ப்பாண பொலிஸா ரால் ஒலிபெருக்கி மூலம் விழிப்புணர்வு நடவடிக் கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

கம்பஹா ஆடைத் தொழிற்சாலையில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் பலர் ஆங்காங்கே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் கொ ரோனா தொற்றிலிருந்து மக்களை பாதுகாக்கும் வகையில் சுகாதார நடை முறைகளைப் பேணு மாறு யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் ஒலிபெருக்கி மூலம் விழிப் புணர்வு நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (நி-5)

# மீண்டும் கொரோனா மனவேதனையை தருகிறது சுகாதார நடைமுறைகளை உதாசீனம் செய்யாது கடைப்பிடியுங்கள்

## மக்களிடம் மன்றாட்டமாக கேட்ட ஜனாதிபதி



(கொழும்பு)

கொவிட் நோய்த்தொற்று பரவல் மிகச் சாதாரணமாக நிகழத்தக்க தீவிர புறச்சூழல் ஒன்று நிலவியதை மக்கள் அலட்சியப்படுத்தி நடந்து கொண்டமை எனக்கு மிகுந்த மன வேதனையைத் தருகின்றது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இங்கையில் கொரோனாத் தொற்று மீண்டும் சமூக மட்டத்தில் பரவுவதனையடுத்து சுகாதார நடைமுறைகளை பொதுமக்கள் பின்பற்ற வேண்டும் என கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று விசேட அறிக்கையினை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொவிட் தடுப்பிற்காக அரசாங்கம் வழங்கி இருந்த அறிவுரைகளைப் பின்பற்றுவதில் மக்கள் மத்தியில் ஆர்வம் குறைவடைந்ததே நோய்த் தொற்று மீண்டும் பரவியதற்கான அடிப்படை காரணமாகும் என சுகாதாரத் துறையினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

கொவிட் நோய்த் தடுப்புக்குப் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் கண்டறியப்பட்டு அறிவிக்கப்பட்ட செயற்பாடுகளை மக்கள் உரிய முறையில் பின்பற்றாமை பெரும் குறைபாடாக அமைந்து விட்டது என பொலிஸார் சுட்டிக்காட்டுகின்றனர்.

கொவிட் நோய்த் தொற்று உலகின் ஏனைய நாடுகளில் மிக வேகமாகப் பரவி வருகின்ற போதிலும் அது தொடர்பான அறிவூட்டல்களை வழங்கி, மக்களுக்குத் தெளிவூட்டும் நடவடிக்கைகளை ஊடகங்களும் குறைத்துக்கொண்டு விட்டன. கொவிட் நோய்த் தொற்று பரவல் மிகச் சாதாரணமாக நிகழத்தக்க தீவிர புறச்சூழல் ஒன்று நிலவியதை மக்கள் அலட்சியப்படுத்தி நடந்து கொண்டமை எனக்கு மிகுந்த மன வேதனையைத் தருகின்றது.

தற்போதைய நிலைமையைப் புரிந்துகொண்டு கொவிட் பரவல் மேலும் நிகழ்வதனைத் தடுப்பதில் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் பாரிய பொறுப்பு அனைத்து ஊடகங்களுக்கும், எமது நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் குடிமகளுக்கும் உள்ளது என்பதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

மக்களைத் தெளிவுபடுத்தும் நடவடிக்கைகளை, ஒரு கூட்டுப் பொறுப்புணர்வோடு ஊடகங்கள் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் எனவும், நிலைமையின் தீவிரத்தைப் புரிந்துணர்ந்து, உரிய தற்காப்பு அறிவுரைகளைப் பின்பற்றி, மக்களும் ஒழுக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும் எனவும் நான் தாழ்மையோடு வேண்டி நிற்கின்றேன் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-7)

## வடக்கில் 6 ஆயிரத்து 682 வீடுகள் அமைக்கும் திட்டம் அடுத்த ஆண்டு பூர்த்தியாகும்- பிரதமர் மகிந்த



(யாழ்ப்பாணம்)

வடக்கில் மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு பிரதேசங்களுக்கான 6682 வீடுகளைக் கொண்ட வீட்டுத் திட்டம் அடுத்த ஆண்டு பூர்த்தியாகும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மேலும் இந்த வேலைத் திட்டத்தை அரசாங்கம் முழுமைப்படுத்தி வழங்கும் எனவும் அவர் வாக்குறுதியளித்தார்.

பாராளுமன்றில் நேற்று புதன்கிழமை பிரதமர் இடத்திலான கேள்வி நேரத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் எழுப்பிய கேள்விக்கு பதில் கூறுகையிலேயே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர்,

“கடந்த ஆட்சிக் காலத்தில் வடக்கிற்கு இந்த வீட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எனினும் சில காலதாமதம் ஏற்படக் காரணம் என்னவெனில், 2018 ஆம் ஆண்டில் வீடுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி 2019 ஆம் ஆண்டிற்கும் 2019 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதி 2020 ஆம் ஆண்டுக்கும் என்ற அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த ஆண்டுக்கென முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டம் 2021 ஆம் ஆண்டில் முழுமையாகப் பூர்த்தியாகும். எமது அரசாங்கம் அதற்கான நடவடிக்கையை எடுக்கும்” என பிரதமர் இதன்போது தெரிவித்தார். (நி-7)

## கம்பஹாவை முடக்க வேண்டும்



(கொழும்பு)

கம்பஹா மாவட்டத்துக்கு பூரண ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்தி கொரோனா தொற்று பரவாமல் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொற்றாளர் கண்டுபிடிக்கப்பட்டு ஐந்து நாட்களாகியும் அரசாங்கம் இதனை ஏன் மேற்கொள்ளாமல் இருக்கின்றது என்ற சந்தேகம் எழுகின்றது என கம்பஹா மாவட்ட எதிர்க்கட்சி உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று விசேட கேள்வியொன்றை முன்வைத்து உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். (ஜ-4)

## குணமடைந்தோர்




(கொழும்பு)

நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து நேற்று மேலும் 8 பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, இதுவரையில் கொரோனாத்தொற்றுக்குள்ளாகி பூரணமாக குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 274 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் தொற்று உறுதியானவர்களில் 965 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் 201 பேர் தொடர்ந்தும் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

நாட்டில் இதுவரை 4 ஆயிரத்து 252 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள நிலையில் 13 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பதவி சேனாரத்ன நீக்கம்- அஜித் ரோஹண நியமனம்



(கொழும்பு)

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பதவிக்கு முன்னாள் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண நியமிக்கப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஜாலிய சேனாரத்ன உடன் அமுலுக்கு வரும் வகையில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

இதனையடுத்து, அவருக்குப் பதிலாக முன்னாள் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் கைது செய்யப்பட்ட றிசாத் பதியுதீனின் சகோதரர் ரியாஜ் பதியுதீனின் விடுதலை தொடர்பில் முரண்பாடான அறிக்கைகளை இரு சந்தர்ப்பங்களில் ஜாலிய சேனாரத்ன ஊடகங்களுக்கு வழங்கியதாலேயே இவ்வாறு பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

# மக்கள் பிரதிநிதிகள் முன்மாதிரியாக செயற்பட வேண்டும்

# அதனாலேயே பி.சி.ஆர்.பரிசோதனை செய்தேன்

## ஹரின் பெர்னாண்டோ

(கொழும்பு)

**பாராளுமன்ற உறுப்பினர்கள் 223 பேரும் பி.சி.ஆர்.பரிசோதனையை மேற்கொள்ளவேண்டும். அதுதொடர்பில் சபாநாயகர் உத்தரவிட வேண்டும். அத்துடன் பொதுமக்களுக்கு தைரியமூட்டும் நோக்கிலே குறித்த ப்ரிசோதனையை நான் மேற்கொண்டேன் என எதிர்க்கட்சி உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.**



பாராளுமன்றம் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்றுக் கூடியது. பிரதான நிகழ்வுகளைத் தொடர்ந்து சபை இடம்பெற்றுக் கொண்டிருக்கையில், ஆளுங்கட்சி உறுப்பினர் பிரேமநாத் தொலவத்த ஒழுங்கு பிரச்சினை ஒன்றை முன்வைத்து குறிப்பிடுகையில், எதிர்க்கட்சி உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொண்டுள்ளதாக அவரது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

பரிசோதனை செய்துவிட்டு பாராளுமன்றத்துக்கு வந்திருப்பது அபாயமாகும். அவரை தனிமைப்படுத்த வேண்டும் என்றார்.

இதற்குப் பதிலளித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

இலங்கையில் கொவிட் -19 தொடர்பில் மேற்கொள்ளப்படும் பரிசோதனை தொடர்பில் எமக்கு திருப்தியில்லை. கம்பஹாவில் அதிகமான பிரதேசங்களுக்கு ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கின்றது.

நாங்கள் மக்கள் பிரதிநிதிகள் என்றவகையில் தொடர்ந்து மக்களுடன் நெருங்கி பழகுகின்றோம். நாட்டு மக்கள் அனைவரும் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளவேண்டும் என அரசாங்கம் தெரிவிக்கின்றது.

ஆனால் அரசாங்கத்தில் இருக்கும் எவரும் இதனை செய்யவில்லை. அதனால் தான் ஏனையோருக்கு முன்மாதிரியாக இருப்பதற்கும் இந்த பரிசோதனையில் பயப்படுவதற்கு எதுவும் இல்லை என்பதை மக்களுக்கு அறிவுறுத்துவதற்குமே நான் பி.சி.ஆர்.பரிசோதனையை செய்து அதுதொடர்பில் எனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டேன். மாறாக எனக்கு தடிமல், காய்ச்சல் எதுவும் இல்லை.

மேலும் அரசாங்கம் இது தொடர்பில் பொறுப்பற்று செயற்படுவது தொடர்பில் கவலையடைகின்றேன் என அவர் தெரிவித்தார். (ஜ-4)



# பாராளுமன்றில் கஞ்சா புகைப்பவர்கள் உள்ளனரா? பிரதமரின் கேள்வியால் சபையில் அமளி

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் கஞ்சா புகைப்பவர்கள் இருக்கின்றனரா? என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரணவிடம் கேள்வி எழுப்பியதை அடுத்து பாராளுமன்றத்தில் பெரும் அமளி ஏற்பட்டது.

கஞ்சாவைப் பயிரிடுவது சம்பந்தமாக ஆராய பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவை நியமிக்குமாறு புத்திக பத்திரண, பிரதமரிடம் கோரிக்கை விடுத்த போது பிரதமர் இதனைத் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் கஞ்சா புகைப்பவர்கள் இல்லை என்பதால், அப்படியான குழு அவசியமில்லை என பிரதமர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# துரத்தி வேட்டையாடும் நரி அச்சத்தில் உறைந்த மக்கள்

(களுத்துறை)

களுத்துறை மாவட்டத்தில் அண்மைக்காலமாக நரியொன்றால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த நரி மனிதர்கள் மற்றும் கால்நடை விலங்குகளைக் கண்டால் துரத்தி வேட்டையாடி பலி எடுப்பதாக மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலையில் களுத்துறை சுகாதார வைத்திய அதிகாரியின் 5 பிரிவுகளில் நரிக்கடிக்கு உள்ளாகிய 50 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மில்லனிய, மதுராவல, இங்கிரிய, ஹொரணை மற்றும் வாத்துவ ஆகிய சுகாதார பிரிவுகளில் இந்தச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அந்த அமைச்சின் பொதுச் சுகாதார, கால்நடை வைத்திய சேவை குறித்த பணிப்பாளர் மருத்துவர் எல்.டீ.கித்சிறி குறிப்பிட்டுள்ளார்.

அதில் 30 சம்பவங்கள் நாய், நரி கடித்துள்ளதாகவும் 11 பேரை நரி கடித்ததாகவும் பதிவாகியுள்ளது.

மேலும் இந்தக் காலப்பகுதியில் 2 மாடுகளையும் நரிகள் வேட்டையாடியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நரிகள் ஊடாக நீர்வெறுப்பு நோய் பரவிய சம்பவங்கள் அண்மைக்காலமாக குறித்த சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பதிவாகியுள்ளது.

மில்லனிய, மதுராவல, ஹொரணை மற்றும் இங்கிரிய ஆகிய பகுதிகளில் இந்த வருடம் இதுவரையான காலப்பகுதி வரையில் நீர்வெறுப்பு நோயால் பீடிக்கப்பட்டு 11 நரிகளும் 19 நாய்களும் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நிலையில் குறிப்பாக அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் மற்றும் சிறுவர்கள் தனியே எந்தப் பயணங்களையும் மேற்கொள்ள வேண்டாம் என்று எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# கொரோனா வைத்தியசாலையாக மாறிய நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலை

(கொழும்பு)

மாலபேயிலுள்ள நெவில் பெர்னாண்டோ போதனா வைத்தியசாலையில் நேற்று முதல் கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மினுவாங்கொடை ஆடை தொழிற்சாலையில் கொவிட்-19 தொற்றுக்குள்ளான பெண் இனங்காணப்பட்டதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதனைக்கருத்திற்கொண்டு குறித்த வைத்தியசாலை கொரோனாத் தொற்றுக்குச் சிகிச்சை அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த ஆடைத் தொழிற்சாலையிலிருந்து இதுவரை 1000 இற்கும் மேற்பட்டோர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

குருநாகலை, மொனராகலை, யாழ்ப்பாணம், மினுவாங்கொடை, கட்டான, சீதுவ, திவுலப் பிட்டிய, மீரிகம, ஜாஎல மற்றும் மஹர ஆகிய பகுதிகளிலிருந்தும் சில நோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# பாதாள குழு உறுப்பினரின் சகாக்கள் கைது

(கொழும்பு)

பிரபல பாதாள குழு உறுப்பினர் ஒருவரின் சகாக்கள் இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொபெய்கனே பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய கொபெய்கனே - பஹல பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பிலேயே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து ஒரு கிராம் 830 மில்லி கிராம் ஹெரோயின், 2 கத்திகள், கித்துல் கட்டைகள் 2, கைத்தொலைபேசிகள் 6, 11 சிம் அட்டைகள், போலி சாரதி அனுமதிப்பத்திரம், ஜீப் மற்றும் கார் ஆகியன கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்தினபுரி மற்றும் பாதுக்கை பகுதிகளைச் சேர்ந்த 26 மற்றும் 42 வயதான நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில்அவிசாவளை, ஹோமாகம, பூகொட மற்றும் கங்கொடவில நீதிமன்றங்களில் குறித்த சந்தேக நபர்கள் இருவரின் பெயரிலும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் நீதிமன்றங்களினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ஜ-4)

# நாட்டை முடக்க வேண்டிய அவசியமில்லை

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

“ (கொழும்பு)

**நா**ட்டில் கொவிட் -19 வைரஸ் பரவலின் இரண்டாம் அலை உருவாகியுள்ளது அச்சுறுத்தல் என்றாலும் கூட இப்போது முழு நாட்டினையும் முடக்க வேண்டிய அவசியம் இல்லை எனத் தெரிவித்த சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, நோயாளர் அடையாளம் காணப்படும் எண்ணிக்கைக்கு அமையவே ஊரடங்குச் சட்டத்தை பிறப்பிப்போம் என்றும் சுட்டிக்காட்டினார். ”



பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை, நாட்டின் கொரோனா நிலைமைகள் குறித்தும் வைரஸ் பரவல் எவ்வாறு மீண்டும் பரவியது என்பது குறித்தும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் விசேட கூற்றின் கீழ் கேள்வி எழுப்பிய வேளையில் அதற்கு பதில் தெரிவிக்கையில் சுகாதார அமைச்சர் இதனை கூறினார்.

கொவிட்-19 குறித்து தீர்மானம் எடுக்கும் வேளையில் அரசியல் நோக்கங்களுக்காக நாம் எந்த தீர்மானமும் எடுக்கவில்லை, சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கு அமையவே நாம் சகல நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# கம்பஹாவின் மேலும் 14 பொலிஸ் பிரிவுகளில் ஊரடங்கு

(கொழும்பு)

கம்பஹா மாவட்டத்தில் மேலும் 14 பொலிஸ் பிரிவுகளில் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண அறிவித்துள்ளார்.

கம்பஹா, கிரிண்டிவெல, தம்பே, பூகோட, வீரகுல, கனேமுள்ள, வெலிவேரிய, மல்வத்துமுகிரிபிட்டிய, நிட்டம்புவ,



மீரிகம, பல்லேவெல, யக்கல, கந்தான மற்றும் ஜா்எல ஆகிய பொலிஸ் பிரிவுகளிலேயே இவ்வாறு ஊரடங்கு நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் மினுவாங்கொடை, திவுலப்பிட்டிய மற்றும் வெயாங்கொட பொலிஸ் பிரிவுகளில் மட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த ஊரடங்கு கம்பஹா பொலிஸ் பிரிவிலும் நேற்று முன்தினம் மாலை 6 மணி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# சுகாதார நடைமுறை பின்பற்றாத பேருந்துகளின் அனுமதிப்பத்திரம் ரத்து


(கொழும்பு)

பொதுப் போக்குவரத்துச் சேவைகளைப் பயன்படுத்தும் போது சுகாதார ஆலோசனைகளுக்கமைய செயற்படுமாறு மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். முகக்கவசமில்லாத பயணிகளை பேருந்துகளில் ஏற்ற வேண்டாம் என, அனைத்து பேருந்து ஊழியர்களுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளதாக, இலங்கை போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது.

இதேவேளை, சுகாதார நடைமுறைகளை உரிய வகையில் பின்பற்றாத பேருந்துகளின் அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத்தேசிய போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, பேருந்துகளில் கிருமி ஒழிப்பினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கொமாண்டர் நிலான் மிரண்டா குறிப்பிட்டுள்ளார். (நி-7)

# காலியிலும் கொரோனா அச்சம்



(காலி)

காலியில் வெளி சமூகத்திற்கு இடையில் அங்காங்கே பி.சி.ஆர்.பரிசோதனை நடத்த தீர்மானித்துள்ளதாக காலி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் காஞ்சன சமரரத்தன தெரிவித்தார்.

காலியைச் சேர்ந்த மினுவாங்கொடை திவுலப்பிட்டிய ஆடைத் தொழிற்சாலையில் தொழில் புரியும் சிலருக்கு கொரோனா தொற்றியுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளதை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனடிப்படையில் எல்பிட்டிய, பட்டபொல, நியாகம, அஹங்கம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த சிலருக்குக் கொரோனா தொற்றியுள்ளது உறுதியாகியுள்ளது.

இவர்களில் பட்டபொல பிரதேசத்தைச் சேர்ந்த நபர், பொது போக்குவரத்து சேவைகளில் பயணித்துள்ளதால், அவர் பயணித்த இடங்களை இலக்கு வைத்து பி.சி.ஆர்.பரிசோதனைகளை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)


# தேசிய பூங்காக்களுக்கு உள்நுழைவதற்குத் தடை

(கொழும்பு)

தேசிய பூங்காக்களுக்குள் உள்நுழைவதற்கு மறு அறிவித்தல் வரை தடை விதிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் அசாதாரண நிலைமையை கருத்திற் கொண்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வன ஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் சி.பி.ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.(ஜ-4)

# பிரிட்டன் பிரதமரின் இலங்கைக்கான வர்த்தக தூதராக இவான் மேர்வின்



(லண்டன்)

பிரித்தானியப் பிரதமர் போரிஸ் ஜோன்சன் இலங்கைக்கான பிரதமரின் வர்த்தக தூதராக இவான் மேர்வின் டேவிஸ் பிரபுவை நியமித்துள்ளார்.

பிரித்தானியப் பிரதமர் தனது வர்த்தக தூதர் திட்டத்திற்கு பதினைந்து புதிய நியமனங்களைச் செய்துள்ளார்.

இந்தப் புதிய நியமனங்களை அடுத்து பிரித்தானியாவின் 69 சந்தைகளுக்கான தூதுவர்களின் எண்ணிக்கை 31 ஆக அதிகரித்துள்ளது.

டேவிஸ் பிரபு, 2009 - 2010 ஆம் ஆண்டில் பிரித்தானியாவின் வர்த்தக, முதலீடு மற்றும் சிறு வணிக, உட்கட்டமைப்பு அமைச்சராக பதவி வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ஜ-4)

# மாலைதீவு முன்னாள் ஜனாதிபதிக்கு 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை

(கோலாலம்பூர்)

ஊழல், பண மோசடி மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்ட மாலைதீவு முன்னாள் துணை ஜனாதிபதி அஹமது அதீப்புக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி அப்துல்லா யாமீனுக்கு நெருக்கமானவராக இருந்த அதீப், அவரைப் படுகொலை செய்ய முயன்றதாக 2015 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.



இந்நிலையில் மாலைதீவு குற்றவியல் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பில் அதீப்புக்கு இரண்டு மில்லியன் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. (நி)

# கடலுணவு விற்பனை நிலையம் குருநகரில் திறந்து வைப்பு



(குருநகர்)

கடற்றொழில் நீரியல் வளத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குருநகர் கடலுணவு விற்பனை நிலையத்தினை கடந்த 2 ஆம் திகதி திறந்து வைத்தார்.

அத்தோடு மீன்வாடி, புதிதாக அமைக்கப்பட்ட மண்டபம் மற்றும் இறால் கொள்வனவு செய்யும் நிலையம் ஆகியவற்றையும் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் க.மகேசன், பிரதேச செயலாளர் சா.சுதர்சன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

குருநகர் கடற்றொழில் அபிவிருத்தி சங்க தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வு தலைவர் யூ.சகாயராசா தலைமையில் நடைபெற்றது.

இதில் கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக பல கோரிக்கைகளை முன்வைத்தார். அவரது கோரிக்கையில்,

இந்திய இழுவைப் படகின் அத்துமீறல் செயற்பாடுகளால் கடல் வளம் குன்றுவதாகவும்,

கடலோர ஆற்றுவாய் ஆழமாக்கப்பட வேண்டும், பொது மக்களின் வீட்டுப் பிரச்சினை சம்பந்தமாகவும் குடியேற்றத் திட்டம் ஒன்றினை ஏற்படுத்த வேண்டும் என்பவற்றுடன், எமது தொழிலாளர்களின் நீண்டகாலமாக இருந்து வரும் துறைமுக வசதியினை செய்து தருமாறும் கேட்டுக் கொண்டார்.

இக்கோரிக்கைகளை விரைவாக முடிவு செய்வதாகவும் மக்களின் தேவைகளை நிவர்திப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அரச உத்தியோகத்தர்கள், பொது அமைப்புகளின் உறுப்பினர்கள், பொது மக்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், மாநகர சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (5,4,106)

# தொல்லியல் திணைக்களத்தின் நூதனசாலை தொற்று நீக்கம்



(குப்பிழான்)

யாழ்ப்பாணம் தொல்லியல் திணைக்களத்தின் நூதனசாலையில் கிருமித் தொற்று நீக்கி விசிறும் பணி நேற்றுப் புதன் கிழமை யாழ்.மாநகரசபையின் பொதுச் சுகாதாரப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் தொல்லியல் திணைக்களத்தில் பணியாற்றும் கம்பஹாவைச் சேர்ந்த பெண்ணொருவரின் தாயார் மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றி வரும் நிலையில் அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவர் கடமை புரிந்த நூதனசாலையில் கிருமித் தொற்று நீக்கி விசிறப்பட்டது.

இதேவேளை, யாழ்ப்பாணம் தொல்லியல் திணைக்களத்தின் ஏனைய பணியாளர்கள் அவர்களது வீடுகளில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (5-4-18)

# மஞ்சள் பயிர்ச் செய்கையில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்



(குருமன்காடு)

மஞ்சள் பயிர்ச் செய்கை மேற்கொண்டால் அதிக வருமானத்தை பெற முடியும் என்பதனால் வவுனியா சிறு தோட்டச் செய்கையாளர்கள் மஞ்சள் செய்கையில் கவனம் செலுத்தி அதனை பயிரிட்டு வருகின்றனர்.

அரசாங்கம் மஞ்சள் இறக்குமதியை நிறுத்தியுள்ளதால் அதற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் விவசாயிகள் மஞ்சள் செய்கையில் ஆர்வம் கொண்டுள்ளனர்.

கொவிட் - 19 தாக்கம் காரணமாக நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தவசியாகுளம் மற்றும் சிறிராமபுரம் ஆகிய பகுதிகளில் சிறுதோட்ட செய்கையாளர்கள் மஞ்சள் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். மஞ்சள் பயிரை பிரதான பயிராகவும் ஊடு பயிராகவும் பயிரிடுகின்றனர். கொவிட் - 19 தாக்கம் காரணமாக நாட்டில் மஞ்சளின் தேவை அதிகரித்துள்ளது. மஞ்சள் ஒரு வெப்ப மண்டலப் பயிர் ஆகும். ஆனாலும் கேள்வி அதிகரித்து சந்தை வாய்ப்பு வசதி இருப்பதனால் அவ்வப்போது ஏற்பட்ட காலநிலை மாற்றத்திலும் மஞ்சளைப் பயிரிடுகின்றனர். (5-4-250)

# மரக்கடத்தல் முறியடிப்பு சாரதி தப்பியோட்டம்




(நெளுக்குளம்)

வவுனியா கல்மடுவில் நேற்று முன்தினம் இரவு சட்ட விரோதமாக கடத்தப்படவிருந்த முதிரை மரக்குற்றிகள் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வவுனியா பூவரசங்குளம் இராணுவத்திற்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வவுனியா கல்மடு பகுதி யிலிருந்து வவுனியா நோக்கி கடத்தப்படவிருந்த 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான 12 முதிரை மரக்குற்றிகளையும் பட்டா ரக வாகனத்தினையும் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட வாகனத்தையும், மரக்குற்றிகளையும் பூவர சங்குளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் தப்பியோடியுள்ளனர்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களை பூவரசங்குளம் பொலிஸார் தேடி வருகின்றனர். (5-4-299)




அமரர்.பத்மநாதனின் ஞாபகார்த்தமாக கல்வியங்காடு இந்து தமிழக் கலவன் பாடசாலை, நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம் மற்றும் திருநெல்வேலி கிழக்கு றோமன் கததோலிக்க பாடசாலை மாணவர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டன. நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் தெ.கிரிதரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சமூகசேவையாளர் திருமதி.பிறேமவதி யோகேந்திரன், பாடசாலை அதிபர்கள், சமூக சேவையாளர்கள், நலன் விரும்பிகள், மாணவர்களின் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# ‘20’ இற்கான வாக்களிப்பில் மனச்சாட்சியுடன் செயற்பட ஆளும் தரப்பினருக்கு வாய்ப்பளிக்க வேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை



(கொழும்பு)

அரசியலமைப்புக்கான 20 ஆவது திருத்த சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்காக வாக்களிக்கும் போது, ஆளும் தரப்பு உறுப்பினர்கள் அவர்களது மனச்சாட்சியின்படி தீர்மானித்து வாக்களிப்பதற்கான வாய்ப்பை அரசாங்கம் பெற்றுக் கொடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாகிர் மாகார் கோரிக்கை தெரிவித்தார்.

இதேவேளை 20 ஆவது திருத்த சட்டமூலத்தில் சர்வாதிகார செயற்பாடுகளுக்கான முன்னெடுப்புகள் காணப்படுவதாகவும், அதனால் மக்கள் பிரதிநிதிகள் அரசியல் மற்றும் கட்சிபேதங்களை பாராது நாட்டு மக்களின் நலன்கருதி தீர்மானம் எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது, அரசியலமைப்புக்கான 20 ஆவது திருத்த சட்டமூலம் தொடர்பில் ஆளும் தரப்பு உறுப்பினர்கள் மத்தியிலேயே எதிர்ப்பு பேச்சுகள் எழுந்துள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ “சுபீட்சமான எதிர்காலம்” கொள்கைத்திட்டத்தில் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில் புதியதொரு அரசியலமைப்பு திருத்தத்தை கொண்டு வருவதாகவே தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் எதற்காக அவசரமாக 20 ஆவது அரசியலமைப்பு திருத்தசட்ட மூலத்தை கொண்டு வருவதற்கு முயற்சிக்கின்றார்.

இந்த சட்டமூலத்தில் சர்வாதிகார ஆட்சிக்கான முன்னெடுப்புகளே காணப்படுகின்றன. அதில் காணப்படும் சிக்கலான சட்டமூலங்களை மீள்திருத்தம் செய்துள்ளதாக தெரிவித்தாலும் எந்த சட்டமூலம் மீள்திருத்தம் செய்யப்பட்டுள்ளன என்பது தொடர்பில் உறுதியான பதிலை அரசாங்கம் வழங்கவில்லை.

தற்போது மக்கள் பிரதிநிதிகள் தீர்மானம் மிக்க ஒரு தருணத்தில் இருக்கின்றனர்.

இந்நிலையில் நாம் எதிர்வரும் எமது தலைமுறையினருக்கு ஜனநாயக ஆட்சியை ஒப்படைக்க போகின்றோமா? சர்வாதிகார ஆட்சியை ஒப்படைக்க போகின்றோமா? என்பது தொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-7)

# பணத்திற்காக மக்களின் உயிரை பணயம் வைக்க அரசாங்கம் தயாரில்லை

(கொழும்பு)

**கொரோனா விவகாரத்தை வைத்து அரசியல் இலாபத்தைத் தேடிக்கொள்ள அரசாங்கம் என்றும் முயற்சிக்கவில்லை என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

அத்தோடு, பணத்திற்காக மக்களின் உயிரை பணயம் வைக்க அரசாங்கம் தயாரில்லாத காரணத்தினாலேயே, அரசாங்கம் விமான நிலையங்களை இதுவரை திறக்காமல் உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று புதன்கிழமை உரையாற்றிய அவர், விரைவில் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், “உலகின் வல்லரசு நாடான அமெரிக்காவில் கொரோனா நோயைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளது.

இந்த நிலையில், இந்த வைரஸின் உண்மைத் தன்மையை தெரிந்து கொள்ளாமல் பாராளுமன்றத்தில் கருத்து வெளியிடுவது உகந்ததல்ல.

பிரேஸில், இந்தியா உள்ளிட்ட நாடுகளில் இன்றும் அதிகளவிலான உயிரிழப்புகள் பதிவாகி வருகின்றன.

எனினும் இந்த அரசாங்கம் நாட்டில் கடந்த காலங்களில் சரியான திட்டமிடல்களை மேற்கொண்டமையால்தான் வைரஸை கட்டுப்படுத்த முடியுமாக இருந்தது.

கடந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்திருந்தால் நிச்சயமாக இந்த நிலைமையில் நாடு இருந்திருக்காது.

பாதுகாப்பு அதிகாரிகள், வைத்தியர்கள், வைத்திய நிபுணர்கள், அதிகாரிகள் என அனைவரும் ஒத்துழைத்தே



நாட்டை கொரோனாவிலிருந்து மீட்டுள்ளனர்.

இதனை எதிரணியினர் மறந்துவிடக்கூடாது. நாம் எந்தவொரு இடத்திலும் கொரோனா தொற்று நாட்டிலிருந்து முற்றாக போய்விட்டது எனக் கூறவில்லை.

கடந்த இரண்டு மாதங்களில் சமூகத்தில் எந்தவொரு கொரோனா தொற்றாளர்களும் அடையாளம் காணப்படவில்லை. இந்தக்காலத்தில் விமான நிலையத்தை நாம் திறந்திருந்தால் சுற்றுலாப்பயணிகள் அதிகளவாக வந்திருப்பார்கள்.

எனினும் நாம் அவ்வாறு செய்யவில்லை. பணத்திற்காக மக்களின் உயிரை பணயம் வைக்க அரசாங்கம் தயாரில்லாத காரணத்தினாலேயே அரசாங்கம் விமான நிலையங்களை இதுவரை திறக்காமல் உள்ளது. இதனை எதிர்க்கட்சி முதலில் புரிந்து கொள்ள வேண்டும் என தெரிவித்தார். (ஜ-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 34 ¾ சூரி,செவ் 11 இல்<br>உயரம்: 162cm<br>தகைமை/தொழில் LLB (Attorney), கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் (அரச)<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் வங்கி உத்தியோகமுள்ள பெண்<br>தொ.இ: B/11278 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: மகம் 2<br>கி.பா: 18 செவ் 3 இல்<br>உயரம்: 5’3”<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா.த.<br>எதிர்பார்ப்பு: படித்த பொருத்தமான உத்தியோகமுள்ள மணமகன்.<br>தொ.இ: G/522 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 4<br>கி.பா: 69 செவ் 8 இல்<br>உயரம்: 5’9”<br>தகைமை/தொழில்: HNDA, Bussiness Management (UK)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/11281 | பிறப்பு: 1968 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>கி.பா: 79 ¼ சூரி,செவ் 8 இல்<br>உயரம்: 5’4”<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த.<br>எதிர்பார்ப்பு: தனியார், அரச உத்தியோகம் உள்ள மணமகன் விவாகரத்தும் ஏற்கப்படும்.<br>தொ.இ: G/548 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: மகம் 4<br>கி.பா: 22 செவ் 6 இல்<br>உயரம்: 5’7”<br>தகைமை/தொழில்: Quantity Servyoing, Quantity Serveyor (Priv)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/11282 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 1<br>கி.பா: 47 ¼ செவ் 1 இல்<br>உயரம்: 5’9”<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த.<br>எதிர்பார்ப்பு: வேலையுள்ள மணமகன்<br>தொ.இ: G/608 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 3<br>கி.பா: 13 - செவ் 12 இல்<br>உயரம்: 5’6”<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. சவுதி அரேபியாவில் வேலை செய்கின்றார்.<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/11283 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 51 ½ செவ் 4 இல்<br>உயரம்: 5’3”<br>தகைமை/தொழில்: வெளிவாரி பட்டதாரி. ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: அரச, சுயதொழில் செய்வோர்.<br>தொ.இ: G/621 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் டிப்பர்களுடன் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாற்றுப் பகுதியில் நேற்று அதிகாலை சட்டவிரோத முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மணல் அகழ்வுக்குப் பயன் படுத்தப்பட்ட 2 டிப்பர் வாகனங் களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்கள் இருவரையும் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணை கள் மேற்கொள்ளப்படுவதுடன் அவர்கள் நீதிமன்றில் முன்னி லைப்படுத்தப்படவுள்ளனர் என வும் தருமபுரம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரி சிசேர தெரிவித் தார். (5-4-316)

# மோட்டர் திருடிய மூவர் கைது

(குருமன்காடு)

வவுனியா மகாறம்பைக் குளத்தில் தோட்டத்தில் பூட்டி யிருந்த மோட்டரை திருடிய குற்றச்சாட்டில் மூன்று இளை ஞர்களை நேற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மோட்டர் திருடப்பட்டுள்ள தாக வீட்டின் உரிமையாளரி னால் வவுனியா பொலிஸில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட் டினையடுத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெ டுத்தனர்.

இதன்போது மகாறம்பைக் குளம் பகுதியில் மோட்டரை விற்பனை செய்ய முற்பட்ட மூன்று இளைஞர்களை பொலி ஸார் கைது செய்துள்ள னர்.

அவர்களிடம் மேற்கொள் ளப்பட்ட மேலதிக விசாரணை களின் பின்னர் அவர்களை வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற் குரிய நடவடிக்கையினை வவு னியா குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர். (5-4-250)

# மதுவை வைத்திருந்த மாது கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கட்டைக்காடு பகுதியில் மதுபான விற்பனை யில் ஈடுபட்ட குடும்பப்பெண் கைது செய்யப்பட்டார்.

தருமபுர பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் கட்டை காட்டுப்பகுதியில் 88 ஒரு லீற்றர் போத்தல்களும் 250 மில்லி லீற்றர் 45 போத்தல்களும் இரண்டு 750 மில்லிலீற்றர் போத்தல்களும் வைத்திருந்த குற்றச்சாட்டில் குறித்த பெண் கைது செய்ய ப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரை மேலதிக விசாரணையின் பின்னர் மாவட்ட நீதிமன் றில் முற்படுத்த நடவடிக்கை எடுக் கப்படும் என தருமபுரம் பொலிஸார் தெரிவித்த னர். (5-4-316)

# 56.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி வவுனியாவில் பதிவு

(நெளுக்குளம்)

வவுனியாவில் நேற்று முன்தினம் காலை முதல் நேற்றுக் காலை வரையான 24 மணி நேரத்தில் 56.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வவுனியா வளிமண்டலவியல் அவதா னிப்பு நிலையப் பொறுப்பதிகாரி தா.சதானந்தன் தெரிவித்து ள்ளார்.

நேற்று முன்தினம் காலை 8.30 மணி முதல் நேற்றுக் காலை 8.30 மணிவரையான 24 மணிநேரத்திற்குள் வவுனி யாவில் 56.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. இது கடந்த வருடத்தைவிட குறைவான மழை வீழ்ச்சி யாகும்.

வவுனியாவில் நீண்ட நாட் களின் பின்னர் நேற்று மழை பெய்துள்ளது. பல நாட்களாக வரட்சியான நிலை காரண மாக விவசாயிகள் விவசாய நடவடிக்கையில் ஈடுபட ஆர் வமற்ற நிலையில் இரு ந்தனர். நேற்று மாலை பெய்த மழையை அடுத்து தமது விவசாய நடவ டிக்கைகளை முன்னெடுத்து வருகின்ற னர். (5-4-299)

# தனியார் கல்வி நிலையங்களை உடன் மூடுக- வவு.அரச அதிபர்

(நெளுக்குளம்)

வவுனியாவில் இயங்கி வரும் தனியார் கல்வி நிலை யங்களை மறு அறிவித்தல் வரும் வரை மூடுவதற்கு அர சாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாட லின் போது முடிவு எட்டப்பட் டுள்ளது.

இலங்கையில் கொரோனா நோய்த்தாக்கம் இரண்டாவது



அலையாக இனங்காணப்பட் டுள்ளதையடுத்து பல்வேறு மாவட்டங்களில் வசித்து வரும் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் தொடர்ந்து தனிமைப்படுத்த ப்பட்டு வரும் நிலையில் வவு னியாவில் இயங்கும் தனியார் கல்வி நிலையங்களை தற்கா லிகமாக மறு அறிவித்தல் வரும் வரை மூடுவதற்கு நேற்று தீர்மானிக்கப்பட்டுள் ளது என வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள் ளார். (5-4-250-299)

# வனவளத் துறையினரின் அத்துமீறல் தடுத்து நிறுத்தப்பட்டது

(கிளிநொச்சி)

பரந்தன் உமையாள்புரம் பகுதியில் வனவளத் திணை க்களத்தினர் நேற்று அடாத் தாக எல்லையிடும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இவ்விடயம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் கவனத்திற்குக் கொண்டு சென் றதை அடுத்து பாராளுமன்ற உறுப்பினர் பாராளுமன்ற அமர் வுகளில் கலந்து கொள்வதற் காக கொழும்பு சென்று உள் ளமையால் கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் வேழ மாலிகிதன் குறித்த பகுதிக்கு சென்று மக்களுடன் இணை ந்து சுவீகரிப்பைத் தடுத்து நிறு த்தினார்.

மொத்தமாக 344 ஏக்கர் வரையான விஸ்தீரணமுடைய காணிகளையே குறித்த திணைக்களம் சுவீகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டது.



மயானம், நெல்காய விடும் தளம், பொதுமக்களின் வீடுகள், வயல்கள் உள்ளடங்கலாகவே உள்ள காணிகளையே சுவீக ரிக்க முயற்சித்துள்ளனர்.

இவற்றுக்கான காணி அனு மதிப்பத்திரங்கள் மக்களிடம் உள்ள நிலையிலும் 30 வரு டங்களாக வயல்களில் விதை த்து வருகின்ற நிலையிலும் தொடர்ந்து வயலில் விதைப்பு மேற்கொண்டால் கைது செய் யப்படுவர் என வனவளத் திணைக்களத்தினர் அச்சுறு த்தல் விடுத்தனர்.

குறித்த விடயம் உடனடி யாக பிரதேச செயலாளர், மேலதிக அரசாங்க அதிபர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

குறித்த சுவீகரிப்புக்கு எதிரான போராட்டத்தில் பிர தேச சபையின் தவிசாளருடன் கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர்கள் மற்றும் மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு தடுத்து நிறுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-4)

# பொதுமக்கள் அத்தியாவசியம் இன்றி வைத்தியசாலைக்கு வருவதைத் தவிர்க்கவும்

(குருமன்காடு)

தற்போதுள்ள நெருக்கடி யான சூழலில் அத்தியாவசிய தேவையின்றி பொதுமக்கள் வவுனியா மாவட்ட பொது வைத் தியசாலைக்கு வருவதை தவிர் த்துக் கொள்ளுமாறு வவுனியா வைத்தியசா லையின் பணிப் பாளர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அவசரகால நிலை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

பொதுமக்கள் முடிந்த அளவு வைத்தியசாலைக்கு வருவதை தவிர்த்துக்கொள்ளுங்கள். குறி ப்பாக கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகள் ஆகியோர் அவசி யத் தேவையை தவிர வைத் தியசாலைக்கு வருவதை முற் றாகத் தவிர்க்கவும். மேலும் மாதாந்த மருத்துவ பரிசோ தனைகளை மேற்கொள்ளும் நோயாளர்கள் மாவட்ட வைத் தியசாலைக்கு தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்தி தக வல்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் வருகை தர வேண் டும் எனவும் தெரிவித் தார்.

மாதாந்த மருத்துவ பரி சோதனைகளை வழமையாக நடத்துவது போல தற்போது நடத்த முடியாமல் உள்ளது. அத்துடன் அவர்கள் ஏற்கனவே நோயாளர்களாக இருப்பதால் வைத்தியசாலைக்கு வரும் போது அவர்களை பாதுகாப்பது கடினமாக இருக்கும்.

எனவே வைரஸ் தாக்கி த்தினை கருத்தில் கொண்டு வைத்தியசாலை வளாகத் தினை தொற்று நீக்கும் செய ற்பாடுகளைத் தொடர்ந்து முன் னெடுத்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித் தார். (5-4-250)



இளவாலை வரு த்தப்படாத வாலிபர் சங்கத்தின் "உயர்த்தும் கரங்கள்" செயற்றிட்ட த்தின் கீழ் இளவாலை பகுதியில் வாழ்ந்து வரும் பொருளாதார நலிவான நிலையில் உள்ள பெண் தலை மைத்துவக் குடும்பத் திற்கு 35 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கோழிக்கூடு அமை த்துக் கொடுக்கப்பட்டது.

# இராசிபலன்

08.10.2020
புரட்டாதி 22, வியாழக்கிழமை
சஷ்டி பிற்பகல் 12.54 மணிவரை
மிருசீரிடம் முன்னிரவு 8.3 மணிவரை
சுபநேரம் 7.32-9.2 மணிவரை
இராகுகாலம் 1.32-3.2 மணிவரை
சந்திராஷ்டமம்- அனுசம், கேட்டை வளவன்

**மேஷம்**
சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பகையொன்று நட்பாகலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

**ரிஷபம்**
சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வியாபார விருத்தியுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்**
ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவு ஏற்படலாம், பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், வியாபார நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கடகம்**
தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், மனச்சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது.

**சிம்மம்**
இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, தொழிலில் வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**கன்னி**
புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், காலைப்பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**துலாம்**
ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், உறவினர் வழியில் மனநிறைவான செய்தியொன்று வந்து சேரலாம்.

**விருச்சிகம்**
அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**தனுசு**
நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறலாம், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்**
புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கும்பம்**
பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், நட்பு வட்டம் விரிவடையும் நாள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பிறர் உதவியுண்டு.

**மீனம்**
தொலைபேசி வழியில் பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய நபர்களின் சந்திப்பு இடம்பெறும் வாய்ப்புண்டு.

**எல்லாரையும் உன்னைவிடப் புனிதராக நினை..**

# தற்போது கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா நோயாளிகளிடம் வைரஸ் செறிவு அதிகம்

## பயங்கரநிலை என்கிறார் ஹரித்

(கொழும்பு) ---------------

மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலை கொரோனா கொத்தணியில் அடையாளம் காணப்படும் நோயாளிகளிடம் வைரஸ் செறிவு அதிகளவான மட்டத்தில் இருப்பதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரதானி மருத்துவர் ஹரித அளுத்கே எச்சரித்தார்.



ஊடகத்திற்கு வழங்கிய செவ்வியின் போது அவர் இதனைத் தெரிவித்தார். கடந்த காலத்தில் அடையாளம் காணப்பட்ட சகல நோயாளிகளுக்கும் கொரோனா வைரஸ் தொற்றிய மூலத்தை கண்டு பிடிக்க முடிந்தது.

எனினும் தற்போதைய பெண்ணுக்கு எவ்வாறு கொரோனா தொற்றியது என்பது குறித்த சரியான தகவல்கள் இதுவரை கிடைக்கவில்லை. இது மிகவும் பயங்கரமான நிலைமை.

சமூகத்திற்குள் கொரோனா வைரஸ் பரவாது என்றே இதுவரை நாம் கூறி வந்தோம். இந்த பெண்ணுக்கு கொரோனா வைரஸ் எப்படி தொற்றியது என்பதை கண்டுபிடிக்க முடியவில்லை என்றால், ஆடைத் தொழிற்சாலைக்குள் அல்லது சமூகத்திற்குள் இருந்து அவருக்கு கொரோனா பரவி இருக்கலாம்.

இந்த ஆபத்து பற்றி நாங்கள் சுட்டிக்காட்டினோம். இதனால், இந்த சம்பவத்தில் முழுமையாக என்ன நடந்தது என்பது நாட்டுக்கு வெளியிடப்பட வேண்டியது முக்கியம் என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஐ-4)

# ஊழியர்களின் நலனை உறுதி செய்யும் வகையில் மேலும் பல திருத்தங்கள்-அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

ஊழியர் இழப்பீட்டுக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுக்ளைத் திருத்தியமைக்கும் வகையில் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட சட்டமூலத்தில் ஊழியர் நலனை உறுதி செய்யும் வகையிலான மேலும் பல திருத்தங்களைச் செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாட்டைக் கட்டியெழுப்பும் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப்பிரகடனத்திற்கு அமைய "நாட்டிற்காக வேலை செய்யும் கலாசாரம்" என்ற தொனிப் பொருளின் கீழ் 1934 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க ஊழியர் இழப்பீட்டுக் கட்டளைச் சட்டத்தைத் திருத்தியமைத்து, திடீர் விபத்துக்களின் போது ஊழியர்களுக்குக் கிடைக்க வேண்டிய இழப்பீட்டுத்தொகையை அதிகரிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

அதற்கமைய திடீர் விபத்துக்களால் பாதிக்கப்படும் ஊழியர்களுக்கு செலுத்தப்படும் இழப்பீட்டுத்தொகையை அதிகரிப்பதற்காக ஊழியர் இழப்பீட்டுக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளைத் திருத்தியமைப்பதற்கான சட்டமூலமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

ஊழியர் இழப்பீட்டுக் கட்டளைச் சட்டத்தின் 42 ஆம் உறுப்புரையின் கீழ் ஊழியர் ஒருவருக்கு விபத்து ஏற்படும் போது, தொழில் வழங்குநரால் இழப்பீட்டு ஆணையாளருக்கு இழப்பீட்டுக்கூற்று சமர்ப்பிக்கப் படாத சந்தர்ப்பத்தில் தற்போதுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் விதிக்கப்படும் 1000 ரூபா குற்றப்பணத்தொகையை அதிகரித்தல் மற்றும் இழப்பீட்டு அளவுகளை எடுத்துக்காட்டும் ஊழியர் இழப்பீட்டுக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் துணை ஆவணத்தில் சமகாலத்திற்கு ஏற்ற வகையிலான மாற்றங்களை ஏற்படுத்தல் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு மேற்படி சட்டமூலம் மேலும் திருத்தியமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

அதுமாத்திரமன்றி, இழப்பீடு அறவிடும் நடைமுறைகளைத் துரிதப்படுத்துவதற்காக இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்தின் பதிவாளர் மூலம் சொத்துக்கள் அரசுடைமையாக்கப்பட்டு இழப்பீட்டு அறவீடுகளை மேற்கொள்ளல் மற்றும் தொழிலாளர் இழப்பீட்டுக் காப்புறுதி முறைமையை புதிதாக அறிமுகப்படுத்தல் ஆகிய திருத்தங்களும் உள்வாங்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டது.

அதற்கமைய இவ்விடயங்களை உள்வாங்கக்கூடிய வகையில் தற்போது தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்தை மேலும் திருத்தியமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (நி-7)

# பாராளுமன்றத் தேர்தலில் வாக்கெண்ணல் எவ்வாறு நடைபெறுகிறது?

## (நீங்களும் அறிந்து கொள்ளுங்கள்)


04

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



அதேநேரத்தில் அதற்குரிய வாக்குச் சீட்டுப்பெட்டியையும் திறந்து மேசையின் மேல் பிரிக்கப்பட்ட (a,b,c,...) ஒரு பகுதிக்கு அப்பெட்டியில் உள்ள வாக்குச் சீட்டுகள் உதவித்தெரிவத்தாட்சி அலுவலரால் கையளிக்கப்படும். அனைத்து வாக்குச் சீட்டுகளும் வாக்குப்பெட்டியிலிருந்து வெளியே எடுக்கப்பட்ட பின் வெற்றுப் பெட்டி அனைவருக்கும் காண்பிக்கப்படும். பின்னர் வெற்றுப் பெட்டிகள் வைக்கப்பட வேண்டிய உரிய இடத்திற்கு மாற்றப்படும்.

அவ்வாறே ஒரு சந்தர்ப்பத்தில் பல வாக்களிப்பு நிலையங்களின் வாக்குப் பெட்டிகளின் வாக்குச் சீட்டுக்கள் மேசையின் மேல் பிரிக்கப்பட்ட பல பகுதிகளில் வெவ்வேறாக எண்ணப்படும். வாக்கெண்ணல் மேசையின் பரப்பளவு, பணியாட் குழுவினர்களின் தொகை ஆகிய விடயங்களுக்கேற்ப ஒரே தடவையில் பல வாக்குப்பெட்டிகளிலுள்ள வாக்குகளை எண்ண பல குழுக்களை ஈடுபடுத்த முடியுமா? என்ற விடயம் தீர்மானிக்கப்படும். வாக்குச் சீட்டுகளை எண்ணுபவர்கள் வாக்குச் சீட்டுகளுக்கு எந்தவொரு சேதாரமும் ஏற்படாது எண்ணப் பணிக்கப்படுவர்.




இவ் வெண்ணலின்போது வாக்குச்சீட்டுகள் 50 ஐக் கொண்ட கட்டுக்களாக இறப்பர் பட்டிகளிட்டுக் கட்டப்படும். இவ் வெண்ணலின்போது வாக்குச்சீட்டுகள் கட்சிகள் ரீதியாகப் பிரிக்கப்படுவதில்லை.

ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திற்குமுரிய ஒவ்வொரு வாக்குப் பெட்டியிலுமுள்ள வாக்குச்சீட்டுகளின் எண்ணிக்கையை அக்குழுவுக்குப் பொறுப்பான உதவித்தெரிவத்தாட்சி அலுவலர் அதற்கு உரிய படிவத்தில் **(PE/28)** குறிப்பீடு செய்து தலைமை வாக்கெண்ணும் அலுவலரிடம் கையளிப்பார்.

அப்போது தலைமை வாக்கெண்ணும் அலுவலர் அப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் எண்ணிக்கை (தொகை) வாக்கெடுப்பு நிலையத்தின் சிரேஷ்ட தலைமைதாங்கும் அலுவலரினால் தனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வாக்குச் சீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையுடன் இணங்குகின்றதா? எனப்பார்ப்பார். ஒப்புநோக்கப்பட்ட அவ்விரு தொகைகளும் இணங்கினால் வாக்குச் சீட்டுகளைப் பெரிய பெட்டிக்கு (படம்-1 இல் இலக்கம் 3) மாற்றுமாறும் இணங்காவிடின்மீள எண்ணுமாறும் தலைமை வாக்கெண்ணும் அலுவலர் அப்படிவத்தில் எழுத்து மூலம் கட்டளையிடுவார். (படம்-2 ஐப்பார்க்க)

குறிப்பு- இரு கணக்குகளும் இணங்காவிடின் மீண்டும் மீண்டும் எண்ணப்படும். பொதுவாக நான்கு முறை எண்ணப்படும். அப்போதும் இணங்காவிடின் பெட்டியின் எண்ணிக்கை சரியெனக் கொள்ளப்பட்டு அறிக்கை தயாரிக்கப்படும்.

வாக்குச் சீட்டுகள் இடப்படும் பெரிய பெட்டிக்குப் பொறுப்பாக உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் ஒருவர் இருப்பார். (படம் -1 இல் 3 ஐப் பார்க்க) அவர் வாக்குச் சீட்டுகளிலிருந்து (50 ஆகக் கட்டிய) இறப்பர் பட்டிகளை நீக்கிவிட்டு வாக்குச் சீட்டுக்கள் முழுவதையும் நன்றாகக் கலக்கச்செய்வார். இவ்வாறு வாக்குச் சீட்டுக்கள் முழுவதையும் நன்றாகக் கலக்கச்செய்வதன் நோக்கம் ஒரு குறிப்பிட்ட வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பு நடந்த முறையை (யாருக்கு வாக்களிக்கப்பட்டதென்பதை) அடையாளம் காணக் கூடாதென்பதற்காக.

மேற்கூறப்பட்ட நடைமுறைகள் வாக்கெண்ணும் மண்டபத்திற்குரிய எல்லா வாக்குச் சீட்டுப்பெட்டிகளின் வாக்குச் சீட்டுகளும் பெரியபெட்டிக்கு வந்தடைந்து முடியும் வரை பின்பற்றப்படும். இவ்வாறு முதலாம் கட்ட வாக்கெண்ணல் நடைபெறும் போது கட்சிகளின் வாக்கெண்ணல் முகவர்கள் அவற்றை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருப்பார்கள்.

அவர்களுக்கு ஏதும் சந்தேகம் இருப்பின் உதவித்தெரிவத்தாட்சி அலுவலரிடம் அல்லது தலைமை வாக்கெண்ணும் அலுவலரிடம் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொள்வார்கள். அதேநேரத்தில் தலைமை வாக்கெண்ணும் அலுவலர் தனது குறிப்பேட்டில் **(journal)** தேவையான தகவல் எல்லாவற்றையும் குறித்துக் கொள்ளவார்.

அத்துடன் அவர் உதவித்தெரிவத்தாட்சி அலுவலர்களினால் வழங்கப்பட்ட **PE/28** படிவங்களிலுள்ள விபரங்களை (வாக்குப் பெட்டிகளில் இருந்த வாக்குகளின் எண்ணிக்கை) பயன்படுத்தி, வாக்குச் சீட்டுக் கணக்கை சமப்படுத்துவதற்கான எண்ணல் படிவத்தில் **(CE/201)** வாக்கெடுப்பு மாவட்டத்தின் இலக்கம், வாக்கெடுப்பு நிலையத்தின் பெயர், வாக்குப்பெட்டியின் இலக்கம், ஒவ்வொரு வாக்குப் பெட்டியிலும் இருந்த வாக்குகளின் எண்ணிக்கை, இரு கணக்குகளும் இணங்கியதா? அல்லது இணங்கவில்லையா, போன்ற சகல தகவல்களையும் எழுதி அப்படிவத்தை பூர்த்தி செய்து கையொப்பம் இடுவார்.

பூர்த்தி செய்யப்பட்ட அப்படிவம், தெரிவத்தாட்சி அலுவலரினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளவாறு முடிவுகள் வெளியிடுதல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

முடிவுகளை வெளியிடும் நிலையத்தில் அதன் பிரதியொன்று பெறப்பட்டு மூலப்பிரதி மீண்டும் வாக்கெண்ணும் நிலையத்தின் தலைமை வாக்கெண்ணும் அலுவலருக்கு அனுப்பி வைக்கப்படும்.

இவ்வாறு முதலாம் கட்டம் முடிந்ததும் அவ்வாக்கெண்ணும் நிலையத்திற்கு கிடைக்கப் பெற்ற மொத்த வாக்குகளின் எண்ணிக்கை தெரியவரும்.

பொதுவாக கட்சிகளின் வாக்கெண்ணல் முகவர்கள் மொத்த வாக்குகளின் எண்ணிக்கை தமது குறிப்பேட்டில் பதிந்து வைத்துக் கொள்வார்கள். அடுத்த கட்டமே ஒவ்வொரு கட்சிக்கும் கிடைத்த வாக்குகளை எண்ணுவதாகும்.

**முதலாம் கட்டம் முடிந்ததும் அவ்வாக்கெண்ணும் நிலையத்திற்கு கிடைக்கப் பெற்ற மொத்த வாக்குகளின் எண்ணிக்கை தெரியவரும். பொதுவாக கட்சிகளின் வாக்கெண்ணல் முகவர்கள் வாக்கெண்ணும் நிலையத்திற்கு கிடைக்கப் பெற்ற மொத்த வாக்குகளின் எண்ணிக்கையை தமது குறிப்பேட்டில் பதிந்து வைத்துக் கொள்வார்கள். அடுத்த கட்டமே ஒவ்வொரு கட்சிக்கும் கிடைக்கப் பெற்ற வாக்குகளை எண்ணுவதாகும்.**

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் முன்னர் கூறியது போல் மொத்தமாக யாழில் 73 வாக்கெண்ணும் நிலையங்களும் கிளிநொச்சியில் 14 வாக்கெண்ணும் நிலையங்களும் இதைவிட 16 தபால்மூல வாக்கு எண்ணும் நிலையங்களும் அமைக்கப்பட்டிருந்தன.

அதாவது மொத்தமாக 103 வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இந்நிலையங்கள் எல்லாவற்றிலுமிருந்து மேற்கூறிய முடிவுகள் வெளியிடுதல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படும். இவ்வாறு கிடைக்கப் பெற்ற அறிக்கைகளிலுள்ள வாக்குகளின் எண்ணிக்கைகளைக் கூட்டி யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் எண்ணுவதற்கு பெறப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை அறியப்படும்.

(தொடரும்)

# நிதிக்கட்டுப்பாட்டை குறைமதிப்பிற்குள்ளாக்கும் அரசின் சதிக்கெதிராக அனைவரும் ஒன்றிணைவோம்

## சஜித் அழைப்பு



(கொழும்பு)
பொய்யான அறிக்கைகளை வெளியிட்டு நாட்டு மக்களை தவறான முறையில் வழி நடத்த வேண்டாம். கணக்காளர் நாயகம் தொடர்பான விடயங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

பாராளுமன்றின் நிதிக் கட்டுப்பாட்டை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் அரசாங்கத்தின் சதிக்கு எதிராக அனைத்து சக்திகளும் ஒன்றிணைய வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ அழைப்பு விடுத்தார்.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

அரசியலமைப்பின்20 ஆவது திருத்தத்தில் அரச கணக்காய்வுக்கு பாதிப்பு ஏற்படாது என்றும், எதிர்க்கட்சியினர் போலியான விடயங்களைக்கொண்டு குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள் என்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

உண்மைகளை மறைத்து மக்களை ஏமாற்றும் வகையில் குறித்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது என்பதை குறிப்பிட வேண்டும்.

பிரதமரால் வெளியிடப்பட்ட அறிக்கையில் கணக்காளர் நாயகத்தின் செயற்பாடும் பொது சேவை ஆணையாளரின் செயற்பாடும் ஒப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் பொது தணிக்கையில் நிர்வாக சுதந்திரத்தை நிறுவுதல், நிதி சுதந்திரம் மற்றும் செயற்பாட்டு சுதந்திரத்தை உருவாக்குதல் மற்றும் பொது தணிக்கையின் தர மேம்பாட்டிற்கான சர்வதேச அமைப்புகளின் மரபுகளுடன் இணங்குதல், கணக்காளர் நாயகத்தின் தயாரிப்பு வரை பரந்த அளவிலான விடயங்களை ஒப்படைத்துள்ளது என்பதை சுட்டிக்காட்ட வேண்டும்.

ஜனாதிபதி செயலாளர் காரியாலயம், பிரதமர் காரியாலயம் மற்றும் அமைச்சரவை அமைச்சர்களின் காரியாலயம் ஆகியவை அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் 154 (1) அத்தியாயத்தின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தில் இதனை நீக்குவது சாதாரணம் என பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச நிறுவன கணக்காய்வு தொடர்பில் 20 ஆவது திருத்தத்தில் விதிக்கப்பட்ட நீக்கம் தொடர்பிலும், அதற்கான காரணத்தையும் பிரதமர் தெளிவுபடுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## ஹரினுக்கு பி.சி.ஆர்.பரிசோதனை



(கொழும்பு)
ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, தனக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர். சோதனை தொடர்பான காணொளியை டுவிட்டரில் வெளியிட்டுள்ளார்.

கொரோனா வைரஸிலிருந்து மற்றவர்களைக் காப்பாற்றுவதற்காக பரிசோதனை மேற்கொள்வது நல்லது என்றும் பரிசோதனைகளை மேற்கொள்ளும் தனக்கு கொரோனாத் தொற்று இல்லை என உறுதிப்படுத்துவதும் அவசியம் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

## கொள்கலன்கள் விவகாரம் இழப்பீடு கோரும் இலங்கை

(கொழும்பு)
ஐக்கிய இராச்சியத்திலிருந்து 263 கொள்கலன்களில் கழிவுகளை நாட்டுக்குக் கொண்டு வந்ததன் மூலம் ஏற்பட்ட நட்டங்களுக்காக அரசாங்கம் 1.69 பில்லியன் ரூபா இழப்பீட்டு கோரிக்கையை முன்வைத்துள்ளது.

பாஸல் உடன்படிக்கையின் அடிப்படையிலேயே இந்த இழப்பீட்டு கோரிக்கை கோரப்பட்டுள்ளதாக சுற்றாடல் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

குறித்த கழிவுக் கொள்கலன்கள் இங்கிலாந்திலிருந்து 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

130 கொள்கலன்கள் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்திலும் 133 கொள்கலன்கள் கொழும்பு துறைமுக வளாகத்திலும் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய இராச்சியத்திற்கு இதுவரை 21 கொள்கலன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

கொள்கலன்கள் கொண்டு வந்தமை தொடர்பான விசாரணைகள் முடிவடைந்ததும், மீதமுள்ள கொள்கலன்கள் ஏற்றுமதி செய்யப்படும் என்றும் சுற்றாடல் அமைச்சு கூறியுள்ளது. (ஜ-4)

## பதவி விலகினார் அர்ஜுன



(கொழும்பு)
முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்டத் தலைவர் பதவியிலிருந்து விலகியுள்ளார்.

இது தொடர்பான அவரது இராஜினாமாக் கடிதத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள ருவான் விஜேவர்தன, தனக்கு கீழ் செயற்படுவது பொருத்தமானதாக அமையாது என இராஜினாமா கடிதத்தில் சுட்டிக்காட்டியே அவர் இவ்வாறு பதவி விலகியுள்ளார். (ஜ-4)

## இரத்தினபுரியில் 112 பேர் தனிமைப்படுத்தல்

(கொழும்பு)
இரத்தினபுரி மாவட்டத்தில் 10 பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த, 112 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனரென, இரத்தினபுரி மாவட்டச் செயலாளர் மாலனி லொக்குபோதாகம தெரிவித்தார்.

திவுலப்பிட்டிய பிரண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலையுடன் தொடர்புடைய 18 பேர் மற்றும் கொரோனா வைரஸ் பரவல் ஏற்பட்டுள்ள பகுதிகளில் இருந்து வருகைதந்துள்ள 12 பேர் இதில் அடங்குவதுடன், மேலும் 82 பேர் வெளிநாடுகளில் இருந்து வருகைதந்த நிலையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். (ஜ-4)

## முதலாவது தொற்றாளருடன் தொடர்புடைய எவரும் கொழும்பில் இனங்காணப்படவில்லை

(கொழும்பு)
மினுவாங்கொடைகொரோனா பரவலையடுத்து கொரோனா தொற்றுள்ளோருடன் முதல் நிலைத் தொடர்புடையவர்களைக் கண்டறியும் செயற்பாடு நிறைவடைந்துள்ளது.

எனினும் கொழும்பு மாவட்டத்தில் தொற்றுள்ள அல்லது சந்தேகத்துக்கு இடமான எவரும் இல்லை என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் பணிப்பாளர் சுதத் அமரவீர தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், மொனராகல, மாத்தளை மற்றும் குருநாகல் மாவட்டத்திலேயே கொரோனா பாதித்தோருடன் முதல்நிலைத் தொடர்புடையவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் ஏற்பட்டுள்ள கொரோனா பரவலையடுத்து சுகாதாரத் துறை, இராணுவம் மற்றும் புலனாய்வு பிரிவினர் முன்னெடுத்த முதல் நிலைத் தொடர்பாளர்களை (தொற்றுள்ளவருடன் நேரடித் தொடர்புடையவர்கள்) அடையாளப்படுத்தலிலேயே இந்த முடிவு கிடைத்துள்ளது.



எனினும் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை தொடர்புடையவர்களை அடையாளப்படுத்தல் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## ஏலக்காய் உற்பத்தியாளர்களுக்கு விசேட சலுகை வழங்கத்திட்டம்




(கொழும்பு)
ஏலக்காய் மற்றும் மிளகு உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு சிறப்பு கொடுப்பனவு வழங்குவதற்கான விசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியாகியது.

அதன்படி, குறித்த தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு தினசரி ஊதியமாக 831 ரூபாய் 44 சதம் வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)



# பாரதம்

## பொறுப்பற்ற சுற்றுலாப்பயணிகளால் அடல் சுரங்கப்பாதையில் விபத்துகள்



(டில்லி)
பிரதமர் மோடியால் திறந்து வைக்கப்பட்ட உலகின் நீள மான நெடுஞ்சாலை சுரங்கப் பாதையில் மூன்று நாட்களில் 3 விபத்துகள் ஏற்பட்டுள்ளன.

இமாச்சல பிரதேசத்தில் மணாலி-லஹால் ஸ்பிடி பள் ளத்தாக்கை இணைக்கும் வகை யில் மலையைக் குடைந்து சுரங்கப்பாதை (அடல் சுரங் கப்பாதை) உருவாக்கப்பட்டுள் ளது. உலகின் மிக நீளமான இந்த நெடுஞ்சாலை சுரங்கப்பா தையை பிரதமர் மோடி கடந்த 3 ஆம் திகதி திறந்து வைத்து நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

9.02 கி.மீ. நீளத்தில் அமை ந்துள்ள இந்த சுரங்கப்பாதை மூலம் எல்லா வானிலை கால த்திலும் மணாலியில் இருந்து லஹால்-ஸ்பிடி பள்ளத்தாக்கு க்கு செல்ல முடியும். மணாலி-லே இடையிலான தூரம் 46 கி.மீ. குறைந்துள்ளது. இருவழி சுரங்கப்பாதையான இந்த வீதி யில், வாகனங்கள் மணிக்கு 80 கி.மீ.வேகத்தில் செல்ல லாம். இந்த சுரங்கப்பாதை பயன்பாட்டிற்கு வந்ததால் வாகன சாரதிகள் உற்சாகமடைந்துள்ள னர்.

இந்நிலையில், சுரங்கப் பாதை திறக்கப்பட்ட 3 நாட்க ளில் 3 விபத்துகள் ஏற்பட்டிரு ப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. சுற்றுலாப் பயணிகள் மற்றும் வாகன சாரதிகளின் பொறுப்பற்ற செயலால் இந்த விபத்துகள் ஏற்பட்டதாக சுரங் கப்பாதையின் தலைமை பொறி யாளர் புருசோத்தமன் தெரி வித்தார்.

அவர் மேலும் கூறுகையில், 'சுரங்கப் பாதையின் இடையில் வாகனத்தை நிறுத்தி செல்பி எடுத்துக் கொண்டிருப்பது அங்கி ருந்த சி.சி.டி.வி. கமராக்கள் மூலம் தெரிய வந்துள்ளது. குறிப்பிட்ட வேகத்தை விட அதிக வேகத்தில் வாகனங்கள் சென்றன. வாகனங்கள் முந்து வதற்கு சுரங்கப்பாதைகளில் அனுமதி இல்லை என்ற நிலை யில் ஒரு சில வாகனங்கள் முந்திச் செல்ல முயன்றன. இதனால் தான் இந்த விபத்து க்கள் ஏற்பட்டுள்ளன.

சுரங்கப்பாதையில் வாகன சாரதிகள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். சுரங்கப் பாதையில் வாகன சாரதிகள் மற்றும் சுற்றுலா பயணிகள் வாகனத்தை நிறுத்தி செல்பி எடுத்துக் கொண்டிருப்பது மற்ற வாகன சாரதிகளுக்கு பெரும் இடையூறாக உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

## ஆப்கான் கண்ணிவெடி தாக்குதல்

### 3 பேர் உயிரிழப்பு



(காபூல்)
ஆப்கானிஸ்தானில் வீதி யோரத்தில் பயங்கரவாதிகள் புதைத்து வைத்திருந்த கண்ணி வெடி வெடித்ததில் ஒரு பெண் உட்பட 3 பேர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானில் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பாதுகாப்புப் படையினரைக் குறிவைத்து பய ங்கரவாதிகள் தாக்குதல் நடத் துவது அதிகரித்துள்ளது.

நேற்று காப்சியா மாகாண த்தின் தகாப் மாவட்டத்தில் பய ங்கரவாதிகள் தாக்குதல் நடத்தி உள்ளனர். காசாசினா பகுதி யில் பயங்கரவாதிகளால் வீதி யோரம் புதைத்து வைக்கப்பட் டிருந்த கண்ணிவெடி வெடித்து சிதறியதில் ஒரு பெண் உட்பட 3 பேர் உயிரிழந்தனர். 2 பேர் காயமடைந்தனர்.

இதேபோல் பால்க் மாகா ணம் ஹைராதன் பகுதியில் நடத்தப்பட்ட கண்ணிவெடி தாக் குதலில் 2 பேர் பலத்த காயம டைந்தனர்.

இந்தத் தாக்குதல்களுக்கு எந்த அமைப்பும் இதுவரை பொறுப்பேற்கவில்லை.

எனினும் தலிபான் அமைப் பினர் இந்தத் தாக்குதல்களை நடத்தியிருக்கலாம் எனக் குற் றம்சாட்டப்படுகிறது. (நி)

## நைல் நதியில் கட்டப்பட்டுள்ள அணைக்கு மேலாக விமானங்கள் பறக்கத்தடை

(அடிஸ் அபாபா)
நைல் நதியில் கட்டப்பட்டி ருக்கும் சர்ச்சைக்குரிய பாரிய அணைக்கு மேலாக விமான ங்கள் பறப்பதற்கு எதியோப் பியா தடை விதித்துள்ளது.

4.8 பில்லியன் டொலர் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த அணை நாட்டின் பொரு ளாதாரத்திற்கு தீர்க்கமானதாக எதியோப்பியா கருதுகிறது.

இந்த அணை தொடர்பில் எகிப்து மற்றும் சூடான் அதிருப் தியில் உள்ளன. இதனால் தமது நாட்டின் நைல் நதி நீரோ ட்டத்தில் தட்டுப்பாடு ஏற்படலாம் என்று இந்த நாடுகள் கவலை அடைந்துள்ளன.

குறித்த அணையை பாதுகா க்க தயாராக இருப்பதாக எதியோ ப்பிய விமானப்படை ஒரு வாரத் திற்கு முன் எச்சரிக்கை விடுத்தி ருந்தது. "அணையை பாதுகாப்ப தற்காக அனைத்து விமானங்க ளுக்கும் தடை விதிக்கப்படுகின் றன" என எதியோப்பிய சிவில் விமானப்போக்குவரத்து அதி காரசபையின் பணிப்பாளர் நாய கம் வெசென்யெலே ஹனெக்னோ தெரிவித்துள்ளார். (நி)

## இந்த ஆண்டு இறுதி... தயாராகி விடும் உல...

"(ஜெனிவா)
கொரோனா வைரஸுக்கான த... ஆண்டு இறுதிக்குள் தயாராகிவிடு... சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோ... நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கொரோனா வைரஸுக்கான தடுப்பூசி எப்போது கிடைக்கும் என்ற கேள்விக்குப் பதிலளிக் கும்போதே அவர் இந்தத் தக வலை வெளியிட்டுள்ளார்.

மேலும் கொரோனாத் தடுப் பூசி தயாரானவுடன் அவை அனைவருக்கும் சமமான விகிதத்தில் விநியோகம் செய்யப்படும் என்றும் இதற்கு உலக நாடுகளின் தலைவர்கள் ஒத்துழைப்பு தரவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் கொரோனாவை ஒழிக்க தடுப்பூசி நிச்சயம் தேவைப்படுகிறது எ... கொ... எ... எ...

## பொதுத் தேர்தல் முடிவுகளை... கிர்கிஸ்தான் மக்கள் மா...



(பிஷ்கெக்)
கிர்கிஸ் தானில் பொதுத் தேர்தல் முடிவுகளை ரத்து செய்யக்கோரி தலைநகர் பிஷ் கெக்கில் உள்ள மத்திய சதுக் கத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு பிரமாண்ட போராட்டம் நடத்தினர்.

மத்திய ஆசிய நாடுகளில் ஒன்றான கிர்கிஸ்தானில் கட ந்த ஞாயிற்றுக்கிழமை பொதுத் தேர்தல் நடைபெற்றது. 120 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்திற்கு 16 கட்சி களைச் சேர்ந்த நூற்றுக்கணக் கான வேட்பாளர்கள் போட்டியி ட்டனர்.

கொரோனாத் தொற்று அச்சுறுத் தலுக்கு மத்தியிலும் வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்று, 98.14 சதவீத வாக்குகள் பதிவானதாக அந்த நாட்டின் தேர்தல் ஆணையம் தெரி வித்தது. மேலும் வாக்குப்பதிவு முடிந்த உடனேயே வாக்குகள் அனைத்தும் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட் டன.

ஆட்சி அமைக்க 61 இடங்கள் தேவை என்கிற நிலையில் எந்த ஒரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. அதேசமயம் போட்டியிட்ட 16 கட்சிகளில் வெறும் 4 கட்சிகள் மட்டுமே 7 சதவீத வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத் துக்குள் நுழைவதற்கான தகுதியைப் பெற்றது.


அ... மு... அ... த... மு... க... அ... ர்... எ... ம... ம... ந... க... மே...

# வெளிநாடு

## ...றுதிக்குள் கொரோனா தடுப்பூசி

### உலக சுகாதார அமைப்பு நம்பிக்கை

...ன தடுப்பூசி இந்த
...விடும் என உலக
...ட்ரோஸ் ஆதனாம்
"





எனத் தெரிவித்துள்ள டெட்ரோஸ் ஆதனாம், இந்த ஆண்டு இறுதிக்குள் கொரோனாத் தடுப்பூசி தயாராகிவிடும் என்பதில் மிகுந்த நம்பிக்கை உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

சீனாவில்கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ், தற்போது உலகின் 213 நாடுகள் மற்றும் பிரதேசங்களில் பரவி பெரும் மனித பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

இந்த வைரஸுக்குத் தடுப்பு மருந்து கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். தடுப்பூசி கண்டுபிடிக்கும் முயற்சியில் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள போதும் கொரோனாவின் தாக்கமும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

இதற்கிடையில் உலகின் பல்வேறு நாடுகளில் 9 கொரோனாத் தடுப்பூசிகள் இறுதிக்கட்ட பரிசோதனை முயற்சியில் உள்ளன. இந்நிலையில், சோதனை வெற்றியடையும் பட்சத்தில் இந்தத் தடுப்பூசிகள் உலக சுகாதார அமைப்பு மூலம் 2021 ஆம் ஆண்டு இறுதிக்குள் 2 மில்லியன் மக்களுக்கு செலுத்த திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## கருந்துளை குறித்து ஆராய்ந்த விஞ்ஞானிகளுக்கு நோபல் பரிசு




(ஸ்டாக்ஹோம்)

கருந்துளைகள் பற்றிய ஆராய்வுக்காக மூன்று விஞ்ஞானிகளுக்கு 2020 ஆம் ஆண்டின் பௌதீகவியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

ரோஜர் பென்ரோஸ், ரெய்ன் ஹார்ட் ஜென்சல் மற்றும் ஆண்ட்ரியா கெஸ் ஆகியோரே இந்த ஆண்டுக்கான நோபல் பரிசு வெற்றியாளர்களாக சுவீடனின் ஸ்டாக்ஹோமில் நடந்த செய்தி மாநாட்டில் அறிவிக்கப்பட்டனர்.

வெற்றியாளர்கள் 10 மில்லியன் குரோனர் (£864,200) பரிசுத் தொகையைப் பகிர்ந்து கொள்வார்கள்.

. கருந்துளை என்பது, இவற்றின் எல்லைக்குட் செல்லும், ஒளி உட்பட்ட எதுவுமே வெளியேற முடியாத அளவு வலுவான ஈர்ப்புச் சக்தியைக் கொண்டுள்ள, அண்டவெளியின் ஒரு பகுதியாகும். (நி)

## ...களை ரத்து செய்யக்கோரி ...ா மாபெரும் போராட்டம்





இதனால் மற்ற 12 கட்சிகளும் கடும் அதிர்ச்சி அடைந்தன. எனவே தேர்தல் முடிவுகளை ஏற்கப் போவதில்லை என அந்தக் கட்சிகள் கூட்டாக முடிவு எடுத்தன. அதனைத் தொடர்ந்து தேர்தல் முடிவுகளை ரத்து செய்யக்கோரி எதிர்க்கட்சியினர் போராட்டத்தில் குதித்தனர். அவர்களுடன் பொதுமக்களும் கைகோர்த்ததால் போராட்டம் விசுவரூபம் எடுத்தது.

தலைநகர் பிஷ்கெக்கில் உள்ள மத்திய சதுக்கத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு பிரமாண்ட போராட்டம் நடத்தினர். அப்போது போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் வெடித்தது.

இருதரப்பினரும் ஒருவரை ஒருவர் சரமாரியாகத் தாக்கிக்கொண்டனர். இந்த மோதலில் ஒருவர் உயிரிழந்த நிலையில் சுமார் 600 பேர் படுகாயம் அடைந்தனர்.

இதனிடையே தலைநகர் பிஷ்கெக்கில் உள்ள பாராளுமன்ற கட்டடத்தை போராட்டக்காரர்கள் சூறையாடினர். மேலும் அதே வளாகத்தில் அமைந்துள்ள ஜனாதிபதியின் அலுவலகத்துக்குள் போராட்டக்காரர்கள் நுழைந்து ஆவணங்களை கிழித்தெறிந்தனர்.

இந்தப் போராட்டத்தால் கிர்கிஸ்தானில் தொடர்ந்து பதற்றமான சூழல் காணப்பட்டது. (நி)

## மெக்சிக்கோவில் 12 பேர் கழுத்தறுத்துப் படுகொலை

(மெக்சிக்கோ சிட்டி)

மெக்சிக்கோவில் பெண்கள் உட்பட 12 பேர் கழுத்தை அறுத்து படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

தென்னமெரிக்க நாடுகளில் ஒன்றான மெக்சிக்கோவில், போதைப்பொருள் கடத்தல் கும்பல்களின் ஆதிக்கம் அதிகம்.

இந்தக் கும்பல்களுக்கு இடையே நடைபெறும் சண்டையில், நூற்றுக்கணக்கானோர் கொல்லப்படுவது அங்கு வெகுசாதாரணம்.

இந்த நிலையில் மெக்சிக்கோவின் வடக்குப் பகுதியில் உள்ள சான் லூயிஸ் போடோசி மாகாணத்தில் வில்லா டி ரமோஷ் என்கிற நகரில் உள்ள வீதியில் 2 வாகனங்கள் கேட்பாரற்று நின்கின்றன.

இதுபற்றி தகவல் அறிந்து வந்த பொலிஸார் அதை சோதனையிட்டபோது அவர்களுக்கு கடும் அதிர்ச்சி காத்திருந்தது.

2 வாகனங்களிலும் தலா 6 பிணங்கள் கிடந்தன. 2 பெண்கள் உட்பட 12 பேரின் உடல்களைப் பொலிஸார் கைப்பற்றினர்.

அவர்கள் அனைவரும் கழுத்து அறுக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டது தெரியவந்தது. மேலும் பிணங்கள் கிடந்த ஒரு வாகனத்தில் இருந்து எடுக்கப்பட்ட துண்டுச்சீட்டில் போதைப் பொருள் கடத்தல் தொடர்பான தொழில் போட்டியில் அவர்கள் கொலை செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (நி)

## ஜம்மு-காஷ்மீர் துப்பாக்கிச்சண்டை 3 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை

(காஷ்மீர்)

ஜம்மு-காஷ்மீரின் ஷோபியான் மாவட்டத்தில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் 3 பயங்கரவாதிகளைப் பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றனர்.

ஜம்மு-காஷ்மீரின் ஷோபியான் மாவட்டம் சுகன் ஜைனபோரா பகுதியில் ஆயுதங்களுடன் பயங்கரவாதிகள் நடமாட்டம் இருப்பதாகப் பாதுகாப்புப் படையினருக்குத் தகவல் கிடைத்தது. இதனையடுத்து நேற்றுக்



காலை அப்பகுதியைப் பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினர் சுற்றிவளைத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்போது பாதுகாப்புப் படையினரை நோக்கி பயங்கரவாதிகள் துப்பாக்கியால் சுட்டு தாக்குதல் நடத்தினர். பாதுகாப்புப் படையினரும் பதிலடி கொடுத்தனர்.

நீண்ட நேரம் நீடித்த இந்தச் சண்டையில் 3 பயங்கரவாதிகளைப் பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றனர். அவர்கள் பயன்படுத்திய துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன. இதனையடுத்து தேடுதல் வேட்டை முடிவுக்கு வந்தது. (நி)

# ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்று எப்படிப் பரவியது?

## ஆய்வுகள் முன்னெடுப்பு

(கொழும்பு)

திவுலப்பிட்டிய ஆடை தொழிற்சாலை ஊழியர்களுக்கு எவ்வாறு கொரோனாத் தொற்று பரவல் ஏற்பட்டது என்பது குறித்து கண்டறிவதற்கான ஆய்வுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், கடந்த 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் நடைபெற்ற சில நிகழ்வுகளுக்கு, குறித்த ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் சிலர் கலந்துகொண்டமை கண்டறியப்பட்டுள்ளது.

இதன்படி, கடந்த 25 ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையப் பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் நடத்தப்பட்ட விருந்துபசாரத்தில், குறித்த ஆடைத்தொழிற்சாலையின் நிறைவேற்று அதிகாரிகள் 39 பேர் கலந்துகொண்டுள்ளனர்.

அவர்களில் 8 பேருக்கு தற்போதைய நிலையில், கொரோனாத்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

விமான நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்கள் இந்த விடுதியில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, கடந்த 26 ஆம் திகதி குறித்த ஆடைதொழிற்சாலையில் இடம்பெற்ற விருந்துபசாரத்தில், பிரபல்யமான இசைக்குழுவொன்று இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குறித்த இசைக் குழுவின் உறுப்பினர்கள் 13 பேர் ஆடைத் தொழிற்சாலைக்கு வந்துள்ளதாகவும் அவர்கள் ஊடாக கொரோனா வைரஸ் தொற்று பரவியிருக்க வாய்ப்புள்ளதா? என்ற ரீதியிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (நி-7)

# மினுவாங்கொடையைச் சேர்ந்த 8 ஆயிரம் பேர் தனிமைப்படுத்தலில்

(மினுவாங்கொடை)

மினுவாங்கொடை பகுதியைச் சேர்ந்த சுமார் 8,000 பேர் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும்,

இவர்கள் அனைவரும் 80 தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதேநேரம், நேற்று முன்தினம் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்



களைக் கண்டறியும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவித்தார்.

தொற்றுக்குள்ளானோருடன் தொடர்புகளைப் பேணியவர்களையும் தனிமைப்படுத்துவதன் மூலமே சமூகத்தில் மேலும் தொற்று பரவுவதை கட்டுப்படுத்த முடியும் எனவும் இராணுவத்தளபதி குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம், மினுவாங்கொடை கொரோனா கொத்தணியை அண்மித்த பகுதிகளில் சுமார் 4,000 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இவர்கள் தொடர்பில் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டு வருவதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் மஹேந்திர பாலசூரிய குறிப்பிட்டுள்ளார். (நி-7)

# வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை இலக்கு வைத்து புதிய திட்டம்

(கொழும்பு)

சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட திறமை சான்றிதழை வைத்துள்ள நபர்களை வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு வழிநடத்தும் நடைமுறையொன்றை விரைவில் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சுடன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த புதிய திட்டத்தின் ஊடாக நாட்டிற்கும், வெளிநாட்டில் தொழில் புரியும் தொழிலாளர்களுக்கும் பாரிய நன்மைகள் கிடைக்கும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச ரீதியில் திறமையான தொழிலாளர்களுக்கு உள்ள தேவை அதிகரித்துள்ளதாகவும், இதனால் திறமையான வர்களை கொண்டு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள முடியுமெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், கொரியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளில் உள்ள தொழிலாளர் தேவையை அடிப்படையாகக் கொண்டு புதிய திட்டங்களை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், கிழக்கு ஐரோப்பிய நாடுகளான போலந்து, ருமேனியா போன்ற நாடுகளில் வேலைக்கான வாய்ப்புகள் தற்போது இலங்கைக்கு திறக்கப்பட்டுள்ளதாகவும் ஆகையினால் பொருத்தமான தொழிலாளர் தொகுதியை உருவாக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். இதேவேளை, பட்டதாரிகளுக்கான வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை அடையாளம் காண்பதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். (நி-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வாழ்வின் இயல்பு

கிரேக்க தேசத்திலே ஒரு ராஜா இருந்தார். ஒரு மாதிரியான ராஜா. பிடிவாத குணம்–பைத்தியக்காரத்தனம் இரண்டும் அவரிடம் உண்டு. அந்த மன்னரிடம் ஓர் அழகான கட்டில் இருந்தது. தங்கத்தாலே செய்தது அந்தக் கட்டில். விலை உயர்ந்த வைரம் எல்லாம் அதிலே பதித்து வைத்திருந்தார்கள். அதிலே மரமே கிடையாது...எல்லாம் தங்கம், வைரம், வைடூரியம். அவ்வளவு விலை உயர்ந்த கட்டில் எங்கேயும் கிடையாது... வேறு யாரிடமும் கிடையாது. அப்பேர்ப்பட்ட அபூர்வமான கட்டில்.

அந்த ராஜா தனக்கு என்று சில கொள்கைகளை வைத்திருந்தார். அரண்மனைக்கு யாராவது முக்கியமான விருந்தினர்கள் வந்தால்... அவர்களை அந்தக் கட்டிலில் படுக்க வைப்பார். ஆனால் ஒரு விடயம். வருகின்ற விருந்தினருடைய உயரம் அந்தக் கட்டில் நீளத்திற்குச் சரியாக இருக்க வேண்டும்.. படுத்தால் கூட... குறைவாக இருக்கக் கூடாது. அப்படி ஒரு ஒழுங்கு முறையை அவர் எதிர்பார்க்கின்றவர். யாராவது ஒரு விருந்தினர் வந்தால்... அன்றைக்கு இரவே அந்தக் கட்டிலில் படுக்க அனுமதி கொடுப்பார். வருகின்ற ஆசாமி அந்தக் கட்டிலை விட நீளமாக இருந்தார் என்று வைத்துக் கொள்ளுங்கள்... கட்டிலுக்குத் தகுந்த மாதிரி காலை வெட்டி விடச் சொல்லுவார்.

ஏன் என்றால்.. அந்தக் கட்டில் விலை உயர்ந்தது. அதை மாற்ற முடியாது. அதனால் கட்டிலுக்குத் தகுந்த மாதிரி ஆளை மாற்றி விடுவார். அங்கே கட்டில் தான் முக்கியம். மனிதன் முக்கியமில்லை... அப்படித்தான். பல சமயங்களிலே நமக்கு வாழ்வு முக்கியமாகத் தெரிவதில்லை. சட்ட திட்டங்கள் தான் முக்கியமாகத் தெரிகின்றது.

பொதுவாக ஒரு அளவை வைத்துத்தான் கட்டில் தயார் செய்ய முடியும். ஒரு சராசரி மனிதனின் அளவு அது. சராசரி என்பது... உதாரணத்திற்கு... பத்துப் பேர் உயரத்தைக் கூட்டி பத்தாலே வகுத்து வருகின்ற எண் கணக்கின் ஒரு கற்பனை வடிவம் அது. அந்த வகையிலே தான் அந்தக் கட்டில் தயார் செய்யப்பட்டிருக்கின்றது.

ஆனால் ...சராசரி உயரமுள்ள நடைமுறையிலே இருக்க முடியாது. அது கணக்கிலே ஏற்பட்ட ஒரு கற்பனை அளவு. அந்தக் கற்பனை அளவுக்கு நூறு சதவீதம் சரியாக ஒரு விருந்தாளி வரவேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியாக இருக்குமா?

சரி.. அந்தக் கட்டிலை விட நீளம் குறைச்சலாக அதாவது உயரம் குறைவாக ஒரு ஆசாமி வந்து விடுகின்றார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பவும் அந்த ராஜா சும்மா இருக்க மாட்டார்.

அதுக்கென்றே அரண்மனையிலே சில பலசாலிகளை வைத்திருக்கின்றார். அவர்களைக் கூப்பிட்டுக் கொண்டு வருவார். வந்த விருந்தாளியைக் கையைக் காட்டி விடுவார். தலைப் பக்கம் நாலு பேர். –கால் பக்கம் நாலு பேர் அவரைப் பிடித்து. பலங்கொண்ட மட்டும் இழுக்கச் சொல்லுவார். கட்டில் அளவுக்கு சரியாகப் பொருந்தும் அளவுக்கு நீட்டச் சொல்லுவார். உடம்பு என்ன கம்பியா.. தட்டி நீட்டுவதற்கு...

வருகின்ற விருந்தினர் நல்ல முறையிலே படுத்து ஆனந்தப் படவேண்டும் என்றுதான் அந்த ராஜா நினைக்கின்றார்.

ஆனால் கட்டிலுக்குத் தகுந்த மாதிரி அவர் நீளம் இருக்க வேண்டும் என்று நினைக்கிறதனால் எவ்வளவு இடைஞ்சல்.

இது அரசனின் தவறில்லை..ஒழுங்கு முறையின் தவறு என்கின்றார் ஒரு பெரியவர் .

வாழ்க்கையை நெறிப்படுத்துவது வேறு, கட்டுப்படுத்துவது என்பது வேறு. ஒழுங்கு முறையைத் திணிக்கின்றேன் என்று சொல்லிக் கொண்டு பல பேர் வாழ்வையே இழந்து விடுகின்றார்கள். வாழ்வின் இயல்பு ஆனந்தம், மகிழ்ச்சி. அந்த மகிழ்வை அடைய வேண்டும் என்றால் திறந்த மனதோடு செயற்பட வேுண்டும். இது தெரியாததனால் எங்களில் பல பேர் வாழ்க்கையின் முக்கியமான சில பகுதிகளை இழந்து விடுகின்றோம்.

எங்களிலே சில பேர் வேறு மாதிரி.

ஒரு வைத்தியசாலை. சத்திரசிகிச்சை நடந்து முடிந்தது... அதன் பின்பு தான் நேர்ஸ் அவசரமாக ஓடி வந்து சொன்னார்... டாக்டர் இந்த நோயாளிக்கு காலிலே தான் கட்டி... ஆனால் நீங்கள் மூளையிலே கட்டி என்று நினைத்து தலையிலே சத்திரசிகிச்சை செய்து விட்டீர்கள். மூளை சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய நோயாளி 15 ஆம் நம்பர் கட்டிலிலே இருக்கின்றார் என்றார்.

டாக்டர் பார்த்தார். பரவாயில்லை.. அதனால் என்ன கட்டிலை மாற்றிவிட்டால் போச்சு... இவரைக் கொண்டு போய் 15 ஆம் நம்பர் கட்டிலிலே போட்டுவிடு. சரியா போய்விடும் என்றார்.

## நான் எங்கும் செல்லவில்லை தொழிற்சாலையில் தான் தொற்றியிருக்கும்

## கம்பஹா முதல் தொற்றாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் முதலாவதாக கொரோனா நோயால் பாதிக்கப்பட்ட திவுலப்பிட்டிய பெண் "தனது பணியிடத்தைத் தவிர வேறு எங்கும் செல்லவில்லை" என்று கூறியுள்ளார்.

காலையில் வேலைக்குச் செல்ல தொழிற்சாலையின் வாகனத்தில் ஏறிய பிறகு, இரவு வீடு திரும்புவதாகவும் ஒரு கடைக்கு கூடச் செல்ல தமக்கு நேரமில்லை என்று அவர் கூறியுள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு தொலைபேசி வாயிலாக இதை தெரிவித்துள்ளார். இது தொடர்பான குரல் பதிவையும் அந்த ஊடகம் வெளியிட்டுள்ளது.

"தொழிற்சாலையிலிருந்து தான் எனக்கு தொற்றியிருக்க வேண்டும்" என்று சந்தேகம் எழுவதாகவும் அவர் கூறியுள்ளார். (ஜ-4)

## கல்வித் தரத்தை உயர்த்த கடன்பெறத் தீர்மானம்

(கொழும்பு)

அரச பாடசாலைகளில் இரண்டாம் நிலைக்கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 400 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியைக் கடனாகப் பெறுவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெறப்படும் மேற்படி கடனுதவியின் ஊடாக அரச பாடசாலைகளில் இரண்டாம் நிலைக்கல்விக்கான பாடவிதானங்கள் மற்றும் மதிப்பீட்டு முறைமை என்பன மறுசீரமைக்கப்படவுள்ளன.

அதேபோன்று இக்கடனுதவி மூலம் உரிய வசதிகளுடன் கூடிய முழுமையான இரண்டாம் நிலைக்கல்விப் பாடசாலை வலையமைப்பை பிரதேச செயலக மட்டத்தில் விருத்தி செய்வதுடன் அதன்மூலம் அனைத்து மாணவர்களுக்கும் தரமான இரண்டாம் நிலைக்கல்வி வாய்ப்பை உறுதிப்படுத்துவதற்கும் அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

மேலும் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை 1000 ஆக அதிகரித்தல், கல்வியியல் கல்லூரிகளை பட்டம் வழங்கும் நிலைக்கு உயர்த்துதல், ஆசிரியர் சமநிலையைப் பேணுதல் மற்றும் ஆசிரியர் பற்றாக்குறைக்குத் தீர்வு காண்பதன் ஊடாக மாணவர்கள் தேர்ச்சி மட்டத்தை அதிகரித்தல் ஆகிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்படும் கடன் நிதி பயன்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

## தாதியின் கணவருக்கு கொரோனா!

(கொழும்பு)

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் தொழில் புரிந்து வரும் ஹொரணை கந்தான்ஹேன பிரதேசத்தை சேர்ந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்றி இருப்பது நாகொடை வைத்தியசாலையில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் தெரியவந்துள்ளது என அந்த வைத்தியசாலையின் பணிப்பாளர் தமர களுபோவில தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து அந்த நோயாளி உடனடியாக கொழும்பு ஐ.டி.எச். வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதுடன் இந்த நபரின் மனைவி ஹொரணை வைத்தியசாலையில் தாதியாக சேவையாற்றுவதால், அது தொடர்பாக ஹொரணை வைத்தியசாலையின் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியதாகவும் களுபோவில கூறியுள்ளார்.

இதனையடுத்து குறித்த தாதி மற்றும் அவரது இரண்டு பிள்ளைகளுக்கும் பி.சி.ஆர். பரிசோதனை நடத்தப்பட்டு அவர்கள், தனிமைப்படுத்தலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் குறித்த தாதி சேவையாற்றிய ஹொரணை வைத்தியசாலையின் 5 ஆவது விடுதியில் வெளி நோயாளர்களை அனுமதிக்கப்படுவது மற்றும் அங்கிருந்து வெளியேற முடியாத வகையில் தற்காலிமாக விடுதி மூடப்பட்டுள்ளது. (ஜ-4)

## நீதிமன்றங்களுக்கான அறிவிப்பு

(கொழும்பு)

கொரோனாத் தொற்று நிலைமையின் கீழ் நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய முறைமை மற்றும் பின்பற்றப்பட வேண்டிய சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பில் நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழுவினால் நாட்டின் அனைத்து நீதிமன்றங்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

நீதி அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே.மாயாதுன்னேவினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் வழக்கு விசாரணைகளுக்கு உரிய தினங்களுக்கு பதிலாக வேறு தினங்களை வழங்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், வழக்கு விசாரணைகளுக்காக வழங்கப்படும் வேறு தினங்கள் தொடர்பில் நீதிமன்ற வளாகத்தில் காட்சிப்படுத்துமாறும் நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழுவினால் நாட்டின் அனைத்து நீதிமன்றங்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஊரடங்கு நீக்கப்பட்டதன் பின்னர், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, உரிய நீதிமன்றங்களுக்குச் சென்று தமது வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் தினத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## கொரோனா பற்றிய பதிவுகள் சில



### 16 பிக்குகள் தனிமைப்படுத்தலில்

(மினுவாங்கொடை)

காலி அஹுங்கம பிரதேசத்திலுள்ள விகாரையைச் சேர்ந்த பிக்கு ஒருவர் அண்மையில் மினுவாங்கொடை பிரதேசத்திலுள்ள தனது உறவினர் வீட்டிற்குச் சென்று திரும்பியுள்ளார். இந்த நிலையில் அந்த விகாரையைச் சேர்ந்த 16 பிக்குகள் கொரோனா சந்தேகத்தினால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். கடந்த 29 ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின் பின் மினுவாங்கொடையில் கொரோனா பரவல் ஏற்பட்டதனால் விகாரையிலுள்ள அனைத்து பிக்குமார்களும் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டிருப்பதாக ஹபராதுவ பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பமோத சிறிவர்தன கூறினார். (நி-7)

### ஒருநாள் மட்டும் 4,880 பரிசோதனைகள்

(கொழும்பு)

நாட்டில் அதிக எண்ணிக்கையிலான பி.சி.ஆர். பரிசோதனைகள் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி நேற்று முன்தினம் மட்டும் 4,880 பி.சி.ஆர். சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதாக சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது. பெப்ரவரி முதல் நேற்று வரை நாட்டில் மொத்தமாக 303, 381 பி.சி.ஆர்.சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாட்டில் தற்போதைய கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையானது 4,252 ஆக பதிவாகியுள்ளது. நேற்று முன்தினம் மாத்திரம் நாட்டில் மொத்தமாக 739 புதிய கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் மொத்தமாக 832 பேருக்கு கொரோனாத்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.. அதேநேரம் மேலும் பலருக்கு பி.சி.ஆர். சோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களது சோதனை முடிவுகள் இன்னும் வெளிவரவில்லை. இது தவிர ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து வந்த நால்வரும், இந்தியாவிலிருந்து வருகை தந்த மூவரும், கட்டார், குவைத் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்து வருகை தந்த தலா ஒருவருக்கும் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக நேற்று முன்தினம் கண்டறியப்பட்டது. (நி-7)

### மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் மக்கள் பாவனைக்காக திறக்கப்பட மாட்டாது

(கொழும்பு)

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தினால் வழங்கப்படும் பொதுமக்கள் சேவைகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது. கொவிட் - 19 வைரஸ் காரணமாக நாட்டில் மீண்டும் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைக்கு மத்தியில் 2020 ஒக்டோபர் மாதம் 7 ஆம், 8 ஆம் மற்றும் 9 ஆம் திகதிகளில் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் நாரஹேன்பிட்டி அலுவலகம் மற்றும் வெரஹெர அலுவலகம் பொதுமக்களுக்காக திறக்கப்படமாட்டாது என்பதை தயவுடன் அறியத் தருகின்றோம். இதேவேளை தேசிய ஆட்பதிவு திணைக்களத்தின் தேசிய அடையாள அட்டைகள் மற்றும் பிற அனைத்து பொது சேவைகளையும் வழங்குவதற்கான ஒருநாள் சேவை இன்று முதல் மூன்று நாட்களுக்கு நிறுத்தப்பட்டுள்ளது. அதன்படி பத்தரமுல்லயில் உள்ள தலைமை அலுவலகம், காலி, மட்டக்களப்பு, வவுனியா மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள கிளை அலுவலகங்கள் வெள்ளிக்கிழமை வரை மூடப்படும். (நி-7)

### இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட ஐவருக்கு தொற்று உறுதி

(கம்பஹா)

கம்பஹா - மிரிஸ்வத்த, மெதவத்த பகுதியில் இடம்பெற்ற இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையின் பணியாளர்கள் ஐவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது என கம்பஹா மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். குறித்த இறுதிச் சடங்கில் அந்த தொழிற்சாலையின் ஊழியர்கள் ஏழு பேர் கலந்து கொண்டிருந்த நிலையில் அவர்களில் ஐவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. குறித்த ஐந்து பேரும் மினுவாங்கொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், கடந்த 27 ஆம் திகதி இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்கள் தங்களது வீடுகளில் சுய தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தி பொதுமக்களுக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளதாக கம்பஹா மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். இதனிடையே, இறுதிச் சடங்கு நடைபெற்ற மெதவத்த பகுதியிலும் அதைச் சுற்றியுள்ள வீட்டிலும் கிருமி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-7)

# கடல் புறா

## எத்தனை படைக்கலங்கள்!

அவனிடம் உங்களைக் கொல்லப் பணித்த அந்த ஓலையிருந்தது. ஆகவே உங்களை எப்படியும் காப்பாற்றிப் புகாருக்கு அழைத்து வரும்படி வீரராஜேந்திர சோழ தேவர் எனக்குப் பணித்தார். நில மார்க்கமாக வந்தால் நாளாகுமென்பதால் கடல் மார்க்கமாகச் செல்லவும் ஆணையிட்டார். ஆகவே புரவியுடன் மரக்கலத்திலே வந்து இந்தத் துறைமுகத்தில் இறங்கினேன். அங்குதான் சில விபரீத விபரங்களைக் கேள்விப்பட்டேன். அதுவும் ஒரு சுங்க அதிகாரி மூலமாக" என்று பேசிச் சற்று நிறுத்தினான் இளையபல்லவன்.

"என்ன விபரீதச் செய்திகள் இளைய பல்லவரே?" என்று வினவினான் குணவர்மன், குரலில் கவலையொலி துலங்க.

"முதலில் தமிழர்கள் சிறை செய்யப்படுவதாகக் கேள்விப்பட்டேன். அது மட்டுமல்ல, வேங்கி நாட்டு மன்னன் ராஜராஜேந்திரனுக்கும், சோழர் குலச் செல்வி அங்கம்மா தேவிக்கும் அவதரித்த, ராஜேந்திரன் என நாங்கள் அழைக்கும், அநபாய சோழர் இங்கு சிறைப்பட்டிருப்பதாகவும் அறிந்தேன்" என்றான் இளைய பல்லவன்.

"என்ன! அநபாயச் சோழரா? தங்கள் நண்பரா? இத்தனைத் துணிவா, கலிங்க மன்னனுக்கு!" என்று தந்தை மகள் இருவரும் ஏகோபித்துக் கேட்டார்கள்.

கருணாகர பல்லவன் இளமுறுவல் செய்துவிட்டு " நீங்கள் சொன்ன அந்த வார்த்தைகளைச் சொன்னதால் தான் என்னை வீரர்கள் துரத்தினார்கள். அவர்களிடமிருந்து தப்பித்தான் உங்கள் அறையில் குணவர்மன்.

"அப்படியா?" என்றான் குணவர்மன்.

"ஆமாம், குணவர்மரே! ஏற்கனவே சிதைந்து கிடக்கும் சோழ, கலிங்க உறவைச் சீர்படுத்தவும், அமைதியைத் தென்னகத்தில் நிலைக்கச் செய்யவும், சமாதான ஆக்ஞா பத்திரமொன்றையும் வீரராஜேந்திரர் கொடுத்திருக்கிறார். அதுவும் இனி செல்லாது. இரண்டு நாட்டுக்கும் மேலும் பகையும் போரும்தான் என நினைக்கிறேன். சமாதானத் தூதனாக வந்தேன். இனி சமரின் தூதனாகத் திரும்பப் போகிறேன். சமரின் முரசொலி இப்பொழுதே என் காதில் கேட்கிறது" என்றான் இளைய பல்லவன்.

குணவர்மன் பதிலேதும் சொல்லாமல் அவனை வெறித்துப்பார்த்துக்கொண்டு நின்றான். "இதிலும் விசித்திரமிருக்கிறது இளைய பல்

காலத்தின் பதிவு 13



சாண்டில்யன்

லவரே! கலிங்கத்தின் பகை கடாரத்துக்கு நன்மை பயக்கிறது" என்று சற்று குதூகலத்துடனேயே கூறிய குணவர்மன், "இப்பொழுது கேளும் இளைய பல்லவரே கடாரத்தின் விந்தைக் கதையைச் சொல்லுகிறேன். சீருடன் இருக்க வேண்டிய ஒரு சாம்ராச்சியம் சீரழியும் பாதையில் இறங்கிச் செல்லும் சோகக் கதையைச் சொல்லுகிறேன். அதன் கதைதான் என் கதையும்" என்று தனது கதையை விபரிக்கத் தொடங்கினான்.

### ஸ்ரீவிஜய சாம்ராச்சியம்

ஸ்ரீவிஜய சாம்ராச்சியத்தின் மாபெருங் கதையே தன் கதையென முடிவுரை துவங்கி அந்தக் கதையை விபரிக்கவும் முற்பட்ட குணவர்மன், கதையை உடனடியாக எடுத்துச் சொல்ல முடியாமல் மயங்கியும் தயங்கியும் நின்று நிலை தடுமாறி அறையில் அப்படியும் இப்படியும் சில விநாடிகள் உலவி தனக்குள் ஏதோ முணுமுணுத்துக் கொண்டான்.

துவங்கிய கதையைச் சொல்லவும் முடியாமல் மெல்லவும் மாட்டாமல் அவன் திணறித் திண்டாடுவதைக் கண்ட இளைய பல்லவன் அவனை ஏதும் கேட்காமல் கவலை தோய்ந்த அவன் வதனத்தையும் அத்தனை கவலையிலும் தளராமல் திடமாகவும் கம்பீரமாகவும் நின்ற அவன் சரீரத்தையும் கண்களால் அளவெடுத்தான்.

குணவர்மன் கிட்டத்தட்டத் தன் உயரமே இருப்பதையும் அவனுக்கு வயது நாற்பத்தைந்துக்கு மேலிருக்க முடியாதென்றாலும் தலையிலிருந்து பாய்ந்த கேசத்தின் சில பகுதிகளும் முகத்தின் குறுக்கே கவலை உழுது விட்டிருந்த இரண்டொரு கோடுகளும் அவன் தோற்றத்துக்குப் பத்து வயதைக் கூட்டியே சொல்லும் நிலைமையில் வைத்திருத்ததையும் கவனித்த கருணாகர பல்லவன் இவன் வாழ்க்கையில் பெரிதும் அல்லல்பட்டிருக்க வேண்டும் என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

இத்தனை கவலையிலும் அவன் உதடுகளில் காஞ்சனாதேவியின் உதடுகளில் உறுதியும் துடிப்புமிருந்ததைப் பார்த்த பல்லவ வீரன் கடாரத்தின் இளவரசன் எந்த அசந்தர்ப்ப நிலையிலும் துன்பத்திலும் மனத்தை மட்டும் தளரவிடாத இரும்புத் திடம் வாய்ந்தவன் என்பதைப் புரிந்துகொண்டான்.

அத்தனை திடமும் உறுதியுமிருந்தாலும் அவன் முகத்திலோ கைகளிலோ வடுக்கள் ஏதுமே இல்லாததையும் கவனித்து "அரசியல் தொல்லைதான் இவனுக்கு அதிகமே தவிர வாளைச் சுழற்றும் வேலை இவனுக்கிருக்கக் காரணமில்லை. இவன் போர்களில் அதிகமாக ஈடுபடாதவன்" என்று தனக்குள்ளேயே முடிவு கட்டிக்கொண்டதன்றி "அப்படியிருக்க இவன் பெண்ணுக்கு மட்டும் திறமையான வாள் பயிற்சியை எதற்காக அளித்திருக்கிறான்?" என்று தன்னைத்தானே கேட்டுக் கொள்ளவும் செய்தான்.

மிதமிஞ்சிய கவலையாலும் ஸ்ரீவிஜய சாம்ராச்சியத்தைப் பற்றிய நினைப்பாலும் எண்ணங்கள் உள்ளத்தில் எழுந்து அலைமோதிக் கொண்டிருந்த அந்த நிலையில்கூட குணவர்மனின் கண்கள், இளைய பல்லவனது விழிகள் பாய்ந்த இடங்களையும் அப்படிப் பாய்ந்ததன் விளைவாக முகத்தில் உலவிய எண்ணங்களையும் கவனிக்கத் தவறாததால் அவன் இதழ்களில் வருத்தம் கலந்த புன்முறுவலொன்று தவழ்ந்தது.

அதற்குக் காரணம் சொல்ல அவன் முனைந்தபோது அவன் சொற்களிலும் அந்த வருத்தம் பிரதிபலித்தே நின்றது. "இளைய பல்லவர் நினைப்பதில் தவறில்லை. நான் வாள் போரில் அதிகமாக ஈடுபடாதவன் தான். அதற்குக் காரணமிருக்கிறது" என்று குணவர்மன் மெள்ள மெள்ளச் சொற்களை உதிர்த்தான்.

வாள் போரில் திறனிருந்தாலும் இல்லாவிட்டாலும் முகபாவத்திலிருந்தே பிறர் உணர்ச்சிகளை ஊடுருவிப் பார்க்கும் சக்தி கடாரத்தின் இளவரசனுக்கு மிதமிஞ்சி இருந்ததைக் கவனித்த கருணாகர பல்லவன் பெருவியப்பை அடைந்தானானாலும் அதை வெளிக்குக் காட்டாமல் "கடாரத்தின் இளவரசர் மீது எந்தக் குறையையும் கற்பிக்கும் நோக்கம் எனக்கில்லை" என்று ஏதோ சமாதானம் சொல்ல முயன்றவனை இடையிடையே தடுத்த குணவர்மன் "இளைய பல்லவரே! இதற்குச் சமாதானம் ஏதும் தேவையில்லை.

தமிழகத்தின் இணையற்ற வீரனெனப் பெயரெடுத்த உமது கண்கள் மற்றவர்களிடத்திலும் வீரத்தின் அடையாளங்களை எதிர்பார்ப்பது நியாயம் தானே? அந்தக் குறிக்கோளேதும் தென்படாதபோது "இவன் வீரன்தானா?" என்ற சந்தேகமே உமக்கு ஏற்படுவதும் இயற்கைதான். ஆனால் இதிலும் என் வாழ்க்கையில் சில மர்மங்கள் கலந்திருக்கின்றன" என்றான்.

"அரசனாயிருப்பவன் வாள் போர் பயிலாததற்கும் இவன் வாழ்க்கை மர்மங்களுக்கும் என்ன சம்பந்தமிருக்க முடியும். ஒருவேளை இவன் கோழையாயிருப்பானோ? கோழைத்தனத்தை மறைப்பதற்குக் காரணங்களைக் கண்டு பிடிக்கிறானோ?" என்று சிந்தனை வசப்பட்ட கருணாகர பல்லவன் மீண்டும் தன் கண்களால் குணவர்மனது முகத்தை ஆராய்ந்தான்.

(தொடரும்)

# வகுப்பறையில் மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் நடைமுறையில் திருத்தம் - அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

**வகுப்பறைக்கு சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்காக தற்போது பின்பற்றப்பட்டு வரும் முறைகளைத் திருத்தியமைத்து மேலும் வெளிப்படைத் தன்மையுடன் கூடிய பொறிமுறையை அறிமுகம் செய்வதற்காக கல்வி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.**

நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சரவை இணை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல இதனை தெரிவித்தார்.

அது தொடர்பான அமைச்சரவை தீர்மானம் பின்வருமாறு, முதலாம் தரத்திற்கு சேர்த்துக் கொள்வதற்காக கல்வி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள சுற்றிக்கைக்கு அமைய அதிபர்கள் செயற்படுவர். அதேபோல் புலமைப் பரிசில் பரீட்சைப் புள்ளியின் அடிப்படையில் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளுக்கு 6 ஆம் தரத்திற்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் உயர்தர வகுப்புக்களுக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கும் பாடசாலை அதிபர்கள் நடவடிக்கையெடுப்பர்.

மேலும் 37/2008 மற்றும் 33/2009 சுற்றறிக்கைகளுக்கமைய பாடசாலை அதிபர்களின் ஒப்புதலுடன் இடைத் தரங்களுக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

அதற்கமைய இடமாற்றத்தால் வதிவிடம் மாற்றமடைதல், வெளிநாட்டிலிருந்து வருகை தரல், பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படல், நீதிமன்ற நீதவான்கள், அரச விசேட நிபுணத்துவ மருத்துவர்கள் மற்றும் அரச மருத்துவர்கள், பாடசாலைகளில் மற்றும் கல்வி அமைச்சில் அல்லது அதனுடன் இணைந்த திணைக்களங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் மற்றும் பதவி நிலை உத்தியோகத்தர்கள், இலங்கை கல்வி நிர்வாக சேவை மற்றும் ஆசிரியர் சேவை உத்தியோகத்தர்கள் போன்றவர்களின் பிள்ளைகள் இடைத் தரங்களில் சேர்த்துக் கொள்வதற்கு தகுதியானவர்களாவர்.

அவ்வாறே மாணவர்களை சேர்த்துக் கொள்வதில் ஏற்படும் முறைகேடுகளால் தகுதிவாய்ந்தவர்கள், விசேட தேவையுடைய மாணவர்கள் மற்றும் சமூகப் பராமரிப்பு நிலையங்களிலுள்ள மாணவர்கள் கல்வியை தொடர்வதில் சிக்கல் நிலை காணப்படுகிறது.

அவ்வாறு மாணவர்களை உள்வாங்குவதில் விண்ணப்பங்களைக் கவனத்தில் கொண்டு, ஒரு வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்காக தற்போது பின்பற்றப்பட்டு வரும் முறைகளைத் திருத்தியமைத்து மேலும் வெளிப்படைத்தன்மையுடன் கூடிய பொறிமுறையை அறிமுகம் செய்வதற்காக கல்வி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனை அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (நி-7)

## இராணுவ ஆண்டு விழா கொண்டாட்டங்கள் நிறுத்தம்

(கொழும்பு)

நாட்டில் கொரோனா நிலைமையைக் கருத்தில் கொண்டு 71 ஆவது இராணுவ ஆண்டு விழா கொண்டாட்டங்களை தற்காலிகமாக நிறுத்தி வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த நிகழ்வுகள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நாளை மறுதினம் 10 ஆம் திகதி சனிக்கிழமை நடத்த தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## விமான நிலைய ஊழியருக்கு கொரோனா

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய சுத்திகரிப்புப் பிரிவின் பெண் ஊழியருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக விமான நிலைய சுகாதார அலுவலர் வைத்தியர் சந்திகா விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

சிலாபத்தில் வசிக்கும் 50 வயதான பெண்ணொருவரே இவ்வாறு கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த பெண் நேற்று முன்தினம் மாலை நீர்கொழும்பு பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டார். சோதனை முடிவுகளில் அவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த பெண் தற்போது நீர்கொழும்பு வைத்தியசாலையிலிருந்து கொழும்பு தேசிய தொற்று நோய் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதற்கிடையில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அவருடன் நெருங்கிய தொடர்புகளை பேணிய நபர்களிடம் பி.சி.ஆர். சோதனைகளை முன்னெடுக்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## வைத்தியசாலையிலிருந்து கொரோனா நோயாளி தப்பியோட்டம்

(கொழும்பு)

ராகம வடக்கு கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கொரோனா நோயாளி ஒருவர் வைத்தியசாலையில் இருந்து தப்பிச் சென்றுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இந்த கொரோனா நோயாளி வைத்தியசாலையில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாக வைத்தியசாலை தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறு வைத்தியசாலையில் இருந்து தப்பிச் சென்றவர் பேலியகொட பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது.

குறித்த நோயாளி நேற்றுக் காலை அவரது வீட்டில் வைத்து பாதுகாப்பு பிரிவினால் கண்டு பிடிக்கப்பட்டார்.

குறித்த நோயாளி பொது போக்குவரத்தினை பயன்படுத்தி தனது வீட்டிற்கு சென்றுள்ளதாக முதற்கட்ட விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. (ஜ-4)

## தேசிய கண் வைத்தியசாலைக்கு நோயாளர்கள் மட்டுப்படுத்தப்பட்டனர்

(கொழும்பு)

கொவிட்-19 பரவல் காரணமாக இலங்கை தேசிய கண் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வருகை தரும் நோயாளர்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளனர்.

அதன்படி, அவசர சிகிச்சை, கிளினிக் சிகிச்சை மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்காக மாத்திரம் வைத்தியசாலைக்கு வருமாறு தேசிய கண் வைத்தியசாலையின் பணிப்பாளர் நாயகம் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

விசேடமாக 14 வயதுக்கும் குறைந்த வயதுடைய சிறுவர்களை அநாவசியமாக வைத்தியசாலைக்கு அழைத்து வருவதை தவிர்க்குமாறு பொது மக்களிடம் வைத்தியசாலை அதிகாரிகள் கோரியுள்ளனர்.

இவ்வாறு அத்தியாவசிய சிகிச்சைக்காக கண் வைத்தியசாலைக்கு வரும் அனைவரும் கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்காக கை கழுவுதல், முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியை பேணுதல் ஆகிய சுகாதார வழிகாட்டல்களை பின்பற்ற வேண்டும் என இலங்கை தேசிய கண் வைத்தியசாலை கேட்டுக்கொண்டுள்ளது. (ஜ-4)

## கொரோனா தொடர்பில் கருத்து; வைத்தியரை நீக்கியது ஏன்?




(கொழும்பு)

கடந்த சில மாதங்களாக சமூகத்தில் கொரோனா வைரஸ் காணப்பட்டது என தெரிவித்ததன் காரணமாகவே மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளர் மருத்துவர் ஜயரூவன் பண்டார அந்த பதவியிலிருந்து நீக்கப்பட்டார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்தார். அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டது ஏன்? அரசாங்கம் இந்த விவகாரத்தில் எதையோ மூடி மறைக்க விளைகிறது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். (ஜ-4)

# மனைவியையும் குழந்தையையும் கொன்றுவிட்டு தானும் தற்கொலை





(கொழும்பு)

லண்டனின் பிரன்ற்வோட் என்ற பிரதேசத்தில் ஒருவர் தனது மனைவியையும் பிள்ளையையும் கொலை செய்துவிட்டு, தானும் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பூர்ணா காமேஸ்வரி சிவராஜா என்ற 36 வயது பெண்ணும், கைலாஸ் குகராஜ் என்ற 3 வயது பிள்ளையுமே இவ்வாறு கொல்லப்பட்டிருந்தார்கள்.

இவர்களை கொலை செய்தவர் என்று நம்பப்படும் குகராஜ் சிதம்பரநாதன் என்ற 42 வயது நபர் தன்னைத்தானே குத்தி தற்கொலை செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக குடும்ப உறுப்பினர்களுக்கு எதிரான படுகொலைகள் ஐரோப்பாவின் பல இடங்களிலும் அதிகரித்து வருவதும், மன அழுத்தம் காரணமாக நிறையப் படுகொலைகள் குடும்ப உறுப்பினர்களாலேயே மேற்கொள்ளப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக பிரித்தானியாவில் குடும்பங்கள் இடையிலான சுமார் 100 இற்கும் அதிகமான சம்பவங்கள் இந்த வருடத்தில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.(ஜ-4)

## பொலிஸ் தலைமையகத்தின் அறிவிப்பு



(கொழும்பு)

கொவிட்-19 பரவலை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸ்மா அதிபர் கட்டுப்பாட்டு மையம் மற்றும் பொலிஸ்மா அதிபர் செயற்பாட்டு மையம் என்பன பொலிஸ் தலைமையகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

கொவிட்-19 பரவல் குறித்து பொதுமக்கள் 1933 என்ற உடனடி அழைப்பு இலக்கத்திற்கு, பொலிஸ்மா அதிபர் கட்டுப்பாட்டு மையத்தை தொடர்புகொண்டு தகவல்களை வழங்க முடியும் என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

அத்துடன், 011 597 8701, 011 597 8703, 011 597 8719, 011 597 8722, 011 597 8737, 011 247 2757 என்ற இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்த முடியும் என்றும்,

இதேவேளை 011 244 4480, 011 244 4481, 011 597 8716, 011 597 8731 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு பொலிஸ்மா அதிபர் செயற்பாட்டு மையத்திற்கு தகவல் வழங்க முடியும் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ஜ-4)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2136

Search for people, places and things   Nagendram   Home

### தர்மினி




### ரேணுகா




### றதீஸ்

ஒருவரை பற்றி தெரிந்து கொள்வதை விட அவர்களை புரிந்து கொண்டால் தான் அன்பு ஆயுள் வரை நீடிக்கும்




### காந்தன்




### விதுனா




### மனிஷ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சாரதிக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவில் இலங்கை மாணவியொருவர் விபத்தில் பலியாவதற்கு காரணமான சாரதிக்கு பத்து ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

20 வயதான நிசாலி பெரேரா என்ற இலங்கை மாணவி கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் அவுஸ்திரேலியாவின் விக்டோரியா மாநிலத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

நிசாலி, அவுஸ்திரேலியாவின் மொனாஷ் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வந்தவராவார்.

இந்த நிலையில், குறித்த விபத்தினை மேற்கொண்ட சாரதியான 38 வயதான ஷேன் கோச்ரேனே என்பவருக்கு விக்டோரியா நீதிமன்றம் பத்து ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி அதிக வேகமாக வாகனத்தைச் செலுத்தியமை, விபத்தை மேற்கொண்டு தலைமறைவாகியமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் ஷேனுக்கு நீதிமன்றம் இவ்வாறு தண்டனை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

# ஆன்மீகம்

## அன்னை-தந்தையே ஆரம்ப ஆசிரியர்கள்!

‘தாயிற் சிறந்த ஒரு கோயிலும் இல்லை, தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை’ என்பது ஔவை பெருமாட்டியின் அற்புதமான வாக்கு. பெற்றெடுத்த குழந்தைக்கு ஆலயமும், மந்திரமுமாக அமைய வேண்டிய பொறுப்பு அன்னை-தந்தைக்கே இருக்கிறது என்பதைத்தான் ஔவையார் மேற்கண்ட தொடரில் அறிவுறுத்தி இருக்கிறார் என்பதை நாம் உணர வேண்டும். ‘பிள்ளையைப் பெற்று விட்டால் போதுமா? - அதை பேணி வளர்க்க வேண்டும் தெரியுமா?’ என்றும், ‘எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே! - அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே’ என்றும் திரைப் பாடல்கள் தெரிவிக்கின்றன. அரும்பும் இளவயதில் ஆரம்பத்தில், ஏன், கருவிலிருக்கும் காலத்திலிருந்தே குழந்தைகள் அரிச்சுவடியை பயில ஆரம்பித்து விடுகின்றன. பள்ளியில்தான் குழந்தைகளுக்கு படிப்பு ஆரம்பமாகிறது என்று நாம் எண்ணி விடக் கூடாது.



‘பெற்றோர்தான் முதல் ஆசிரியர்கள்’ என்பதை நாம் உணர வேண்டும். கைகேயி பெற்ற தீய வரத்தால் முடிசூட வேண்டிய ராமன் காட்டிற்குச் செல்கிறான். அயோத்தி நகரமே துயரத்தில் மூழ்குகிறது. அனைவரும் அழுகின்றனர். கம்பர் பாடுகிறார்: “கிள்ளையொடு பூவை அழுத... உருவறியாப் பிள்ளை அழுத” கருவுற்ற மாதர்களுடைய வயிற்றில் இருக்கும் ஆறேழு மாதங்களே ஆன குழந்தைகளும் அழுதன என்று குறிப்பிடுகிறார் கம்பர்.

சோகத்தின் உச்சக் கட்டத்தைக் காட்டுவதற்காக கம்பர் இப்படிச் சொல்லியுள்ளாரா? அல்ல, குழந்தையின் மூளையில் பதிவுகள் அன்னையின் வயிற்றுக்குள் இருக்கும்போதே ஆரம்பமாகி விடுகின்றது என்கிறது அறிவியல்.

தாயின் கருவறையில் வளரும் குழந்தையின் மூளை அமைப்பு ஏழு மாதத்திற்குள் முழுமை அடைந்து விடுகிறது. அதற்குப்பின் தாய் பேசும் போது எழுப்பும் ஒலிகள், கேட்கும் ஒலிகள் எல்லாம் அதன் மூளையில் அதிர்வுகளாகப் பதிவாகி விடுகின்றன என்கின்றனர் அறிவியல் நிபுணர்கள். அதனால்தான் கர்ப்பிணி பெண்கள் நல்லவற்றையே பார்க்க வேண்டும், பேச வேண்டும். தன்னைப் பெற்றெடுத்த தாயார் வீட்டில் பதற்றம் இன்றி நிம்மதியாக இருக்க வேண்டும் என்று நம் மூதாதையர்கள் மொழிகின்றனர். ‘கருவிலே திரு உடையவன்’ என்ற தொடரும் இதைத்தான் குறிப்பிடுகிறது.

‘கருவரங்கத்துள் இருந்து கை தொழுதேன்
திருவரங்கம் மேயான் திசை’

- என்று ஆழ்வாரும் ‘கருவாய்க் கிடந்து உன் கழலே நினையும் கருத்துடையேன்’ - என்று நாயன்மாரும் பாடுகின்றார்கள். கருவுற்ற காலத்தில் அன்னையார் இருந்த சூழல்தான் பிரகலாதனின் பக்தி, அபிமன்யுவின் வீரம் என்று நாம் அறிகின்றோம்.

(தொடரும்...)

# செய்தித்துளிகள்

## மினுவாங்கொடை தொற்றாளர்களில் 28 பேர் இரணவில் பகுதிக்கு

(கொழும்பு)

மினுவாங்கொடை கொரோனா கொத்தணி பரவலில் அடையாளம் காணப்பட்ட 28 தொற்றாளர்கள், இரணவில் பகுதியிலுள்ள கொவிட் - 19 சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இதற்கமைய நேற்று முன்தினம் 17 பேரும் நேற்று 11 பேரும் சிகிச்சைக்காக அனுப்பி வைப்பட்டுள்ளனர். மேற்படி சிகிச்சை நிலையத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 44 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனரென, சிகிச்சை நிலையத்தின் பணிப்பாளர் வைத்தியர் திமுத் பொன்வீர தெரிவித்தார். (ஜ-4)

## தற்காலிகமாக இடைநிறுத்தம்

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தல்கள் காரணமாக வெளிநாடுகளில் இருக்கும் இலங்கையர்களை அழைத்து வரும் நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்துவதற்கு அரசு தீர்மானம் மேற்கொண்டுள்ளது. நாட்டில் தற்போது தனிமைப்படுத்தல் நிலையங்களில் அதிகளவில் பொதுமக்கள் தனிமைப்படுத்தப்படுவதால் குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புனரமைப்பு பணிகளில் ஈடுபட்டுள்ள ஒன்பது பேர் தனிமைப்படுத்தலுக்கு செல்லுமாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## 374 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித்தவித்த மேலும் 374 இலங்கையர்கள் நேற்றுக் காலை நாட்டை வந்தடைந்தனர். அந்தவகையில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து 74 இலங்கையர்களும் மாலைத்தீவில் இருந்து 10 பேரும் தென்கொரியாவில் 285 பேருமே நாட்டை வந்தடைந்தனர். இந்நிலையில் வெளிநாடுகளில் இருந்து நாட்டிற்கு வருகை தந்த 374 பேருக்கும் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 100-120 | 120 |
| உருளைக்கிழங்கு | 160 | 140 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 200 | 160 | 200 | 250 |
| தக்காளி | 180 | 150 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 100 | 80 |
| கோவா | 100 | 130 | 120 | 120 |
| கரட் | 120 | 170 | 200 | 200 |
| பூசணி | 60 | 100 | 80 | 80 |
| புடோல் | 80 | 120 | 80 | 120 |
| வாழைக்காய் | 60 | 100 | 60-80 | 120 |
| சின்ன வெங்காயம் | 200 | 170 | 200-220 | 240 |
| பெரிய வெங்காயம் | 150 | 180 | 180 | 240 |
| பாகற்காய் | 200 | 300 | 220 | 280 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 180 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 220 | 120 |
| பயற்றங்காய் | 120 | 130 | 60 | 120 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 80 | 100 | 70-80 | 100 |
| கறிமிளகாய் | 250 | 260 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 150 | 160 | 100 | 100 |
| போஞ்சி | 200 | 260 | 240 | 280 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 80-100 | 100 |
| கீரை - 1 பிடி | 50 | 40 | 240 | 40 |
| தேசிக்காய் | 80 | 80 | 120 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 350 | -- | -- |
| வெங்காயப்பூ | 200 | 250 | -- | -- |
| முள்ளங்கி | 60 | 80 | 70 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 50 | 30 |
| வல்லாரை | 15 | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | -- | 100 | -- | -- |




## வாசிப்பு மாதம் ஒக்டோபர்-2020

# வைத்தியரும் கிழவியும்



புளியங்குளம் என்னும் கிராமத்தில் செல்லம்மா என்னும் கிழவி வசித்து வந்தார். அவர் நன்கு படித்தவர். மிக்க புத்திசாலி. கிராமத்தில் உள்ளவர்கள் எல்லோரும் இவர் மீது மிக்க மதிப்பு வைத்திருந்தார்கள்.

செல்லம்மாவுக்கு கண் நோய் ஏற்பட்டது. அதற்குச் சிகிச்சை செய்யப் பக்கத்துக் கிராமத்தில் உள்ள ஒரு வைத்தியரை அழைத்து வந்து காட்டினார். அவர் மிக்க பேராசைக்காரர்.

அகப்பட்டவற்றை எடுத்துச் செல்லும் குணம் படைத்தவர். கிழவியின் கண்களைப் பார்வையிட்ட வைத்தியர் ஆயிரம் ரூபா கொடுத்தால் நோயைக் குணப்படுத்துவதாகக் கூறினார். கிழவியும் அதற்குச் சம்மதித்தார்.

வைத்தியர் நாள்தோறும் கிழவியின் வீட்டுக்கு வந்து அவரது கண்களுக்கு மருந்து போட்டுக் கட்டி விட்டுப் போவார்.

அவ்வீட்டில் உள்ள பெறுமதியான பொருட்களைக் காணும்போதெல்லாம் அவற்றை எடுத்துச் செல்ல வேண்டுமென்றே விரும்புவார்.

நாட்கள் சில சென்றன. கிழவியின் கண்களில் மருந்து போட்டுக் கட்டி விட்டுத் திரும்பும்போது அவளது வீட்டில் உள்ள பொருட்களை ஒவ்வொன்றாக எடுத்துச் செல்வார்.

இது கிழவிக்குத் தெரியாது. இரு வாரங்களின் பின்னர் வைத்தியர் கிழவியின் கண்களுக்குக் கட்டுப்போடுவதை நிறுத்தினார். நோய் குணமடைந்து விட்டது.

முன்னர் ஒப்புக்கொண்டபடி ஆயிரம் ரூபாவையும் தரும்படி கிழவியிடம் கேட்டார். கிழவி வீட்டைச் சுற்றுமுற்றும் பார்த்தார். வீட்டில் முன்னர் இருந்த பொருட்கள் எதையும் காணவில்லை.

வைத்தியரே அவற்றை எடுத்துச் சென்று விட்டார் என்பதை உணர்ந்தாள். வைத்தியரைப் பார்த்து "என் கண்கள் சற்றும் குணமாகவில்லை. முன்பு இருந்ததைவிட மோசமாயிருக்கின்றன. ஆதலால் பணம் தர முடியாது" என்றாள்.

வைத்தியருக்குக் கடும் கோபம் வந்தது. "சரி, சரி, நீ பணம் தராவிட்டால் உன்னிடம் எப்படி அறவிடுவது என்பது எனக்குத் தெரியும் இருந்துபார்" என்று கூறி விட்டுக் கோபத்துடன் புறப்பட்டுச் சென்றார்.

கிழவி முன்னர் ஒப்புக்கொண்டபடி பணம் தரவில்லை என்று கூறி நீதிமன்றத்தில் வைத்தியர் வழக்குத் தொடுத்தார்.

கிழவி நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டாள். வழக்கு விசாரணைக்கு வந்தது. நீதிபதி கிழவியைப் பார்த்து "வைத்தியருக்கு ஏன் பணம் கொடுக்கவில்லை?" என்று கேட்டார்.

அதற்குக் கிழவி "கனம் நீதிபதி அவர்களே! எனக்குக் கண்நோய் ஏற்பட்டது உண்மை. என் கண்களைக் குணமாக்கினால் ஆயிரம் ரூபா கொடுப்பதாக இந்த வைத்தியருக்குச் சொன்னதும் உண்மை.

ஆனால் என் கண்களை இவர் குணப்படுத்தவில்லை. இதை உங்களுக்கு விபரித்துக்கூற விரும்புகிறேன். இவர் வைத்தியம் செய்ய ஆரம்பிக்க முன்பு என் வீட்டில் ஏராளமான பொருட்களைப் பார்த்தேன். அவை நல்ல பெறுமதிமிக்கவை. இவர் வைத்தியம் செய்த பின்னர் என் கண்களுக்கு அந்தப் பொருட்கள் எதுவுமே தெரியவில்லை. இந்நிலையில் எப்படி ஐயா பணம் கொடுப்பேன்" என்றாள்.

கிழவியின் வாக்கு மூலத்தைக் கேட்டதும் நீதிபதி உண்மையை உணர்ந்து கொண்டார். வைத்தியரின் நேர்மையற்ற செயலைப் பெரிதும் கண்டித்தார். கிழவியின் வீட்டிலிருந்து எடுத்துச்சென்ற பொருட்கள் அனைத்தையும் திரும்பிக் கொடுக்கும்படி உத்தரவிட்டார்.


வைத்தியர் நேர்மையற்ற வகையில் நடந்து கொண்டதால் அவருக்குக் கிழவி பணம் கொடுக்க வேண்டியதில்லை என்று தீர்ப்பளித்தார். வைத்தியர் மிகவும் வெட்கமும் துக்கமும் அடைந்தார்.

தொகுப்பு:- புத்தூர் பொது நூலகம்.

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## குடி உயரக் கோன் உயரும்

91


ராஜராஜசோழன் படை

ராஜராஜ சோழனின் படையினர் மற்ற நாடுகளில் இருந்து கொண்டு வந்த பொன்னும் மணியும் மக்களுக்கு வழங்கப்பட்டன.

சோழ நாட்டில் பொன்னுக்கும் மணிக்கும் பஞ்சமில்லை என்பதால் பெண்கள் அணிந்த அணிகலன்கள் விதவிதமாக இருந்தன.

ஆண்கள் முழங்கால் வரை ஆடையணிந்தார்கள். தலையில் தலைப்பாகைக் கட்டிக் கொண்டார்கள். ஆண்கள் மேலாடை அணிந்ததாகக் குறிப்புகள் இல்லை.

பெண்களும் மேலாடை அணிந்ததாகக் குறிப்புக்கள் இல்லை. பெண்களும் மேலாடை உடுத்தியதில்லை. இதை நாம் ஓவியங்கள், சிற்பங்கள் வழியாக அறிந்து கொள்ள முடியும்.

அதேசமயம், மார்பை மறைக்கும் கச்சை கட்டிக்கொண்டார்கள். ஆடைகளுக்கு நறுமணப் புகையூட்டி பின்னர் அணிந்து கொண்டார்கள்.

### கலைகள்

பண் கேட்பதும், நாடகம் பார்ப்பதும் மக்களின் முக்கிய பொழுது போக்காக இருந்தன. இசைக் கச்சேரி குறித்து இலக்கணங்கள் வகுக்கப்பட்டன. வாய்ப்பாட்டுக்குக் குழலும் யாழும் வீணையும் பக்க மேளங்களாக இருந்தன.

காப்பியங்களில் கூறப்பட்ட யாழ் வகைகளும் பண் வகைகளும் பயிற்சியில் இருந்தன. இடையர் ஏறு தழுவும் போது ஏறங்கோள் என்கின்ற தனிப்பறையை முழங்கினார்கள்.

வாத்தியங்கள் உருவாக்குவதில் செய்முறைகள் இருந்தன. மட்கிய மரம், வாளால் வெட்டுண்ட மரம், இடி விழுந்த மரம் ஆகியவற்றைக் கொண்டு வீணை செய்யத் தடை விதிக்கப்பட்டது.

வீணை வாசிக்கும் முன், அதற்கு மலர் சூட்டப்பட்டது. இசைக் கலையும் கூத்தையும் விளக்கமாகக் கூறப்பட்ட நூல்கள் பல இருந்தன. மக்கள் பயிலக் கூடிய கலையாக அறுபத்து நான்கு கலைகள் இருந்தன.

சாந்திக் கூத்து, ஆரியக் கூத்து, சாக்கைக் கூத்து, தமிழகக் கூத்து, தெருக்கூத்து என்று ராஜராஜன் காலத்துக் கூத்துக்களில் சில வகைகள் உண்டு. சில கூத்துக்களில் ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டார்கள். இவர்கள் கூத்தப் பெருமக்கள் என்று அழைக்கப்பட்டார்கள். கோயில்களில் மட்டுமில்லாமல் மடங்களிலும் கூத்துகள் நடைபெற்றன.

### இறைவழிபாடு

தமிழக மக்கள் பல விதமான தெய்வங்களை வணங்கி வந்தார்கள். இயற்கை சக்தியே எல்லாம் வல்ல இறைவன் என்று நம்பி வந்த காலமது. மேலும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை போன்ற ஐந்துவகை நிலப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் அவரவருக்கு உகந்த கடவுகள்களை வணங்கியும் போற்றியும் வந்தார்கள்.

(தொடரும்)

உண்மையான மகிழ்ச்சி நாம் சம்பாதிக்கும் பணத்தில் இல்லை, அதில் எவ்வளவு தர்மங்களைச் செய்கிறோம் என்பதில் அடங்கியிருக்கிறது.
– ரவீந்திரநாத் தாகூர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அத்தமும் வாழ்வும் அகத்து மட்டே...

பட்டினத்தடிகள் உபதேசித்த தத்துவங்களை உய்த்துணர்ந்தவர்கள் முற்றுந்துறந்த ஞானிகளாவர்.

அந்தளவுக்கு பட்டினத்தடிகள் மானிட வாழ்வின் ஆதி முதல் அந்தம் வரையான அத்தனை கருமங்களையும் பட்டியல் இட்டுள்ளார்.

இதில் அவர் தந்தருளிய உடற்கூற்றுவண்ணம் உலகம் முழுவதற்கும் பரவுகை செய்யப்பட வேண்டும். இனம், மதம், மொழி கடந்த மானிட வாழ்வின் பொதுமையை உடற்கூற்று வண்ணமாகத் தந்தவர் பட்டினத்தார்.

என்ன செய்வது; பட்டினத்தார் ஓர் ஆங்கிலேயராக இருந்து மேற்போந்த தத்துவத்தை உபதேசித்திருந்திருப்பாராயின் அதுவே சர்வதேசம் முழுமைக்குமான வேதமாக இருந்திருக்கும்.

கெடுகாலம் தமிழனாகப் பிறந்ததனால் அவர் உபதேசித்தருளிய தத்துவமும் முடங்கிப் போனது.

முன்பெல்லாம் ஒருவரின் இறுதி ஊர்வலத்தின்போது பட்டினத்தடிகளின் உடற்கூற்று வண்ணம் வீடு முதல் மயானம் வரை பாடப்படும்.

இப்போதெல்லாம் வி.ஐ.பி (V.I.P) வாகனத்தில் உடலம் வைக்கப்பட்டு இறுதி ஊர்வலம் நடந்தேறுவதால், பட்டினத்தடிகளின் உடற்கூற்றுவண்ணம் பாடும் வழக்கமும் இல்லாமல் போயிற்று.

இனி, இது பற்றியெல்லாம் நாம் கதைப்பதும் பிரஸ்தாபிப்பதும் நேர விரயம் எனக் கருதப்படும் என்பதால், அந்த மனக்குறையை புதைத்து விடுவதுதான் எம்மை ஆற்றுப்படுத்துவதற்கான ஒரே வழி.

இருந்தும் உலகப்பற்றை நீக்கிய அந்தப் பரமயோகி தன் தாய் மீதான அன்பை பற்றறுக்கவில்லை என்பதுதான் நாம் இங்கு கவனிக்க வேண்டிய விடயம்.

ஆம், பற்றறுத்தல் என்பதனூடு அன்பும் தாய்மையும் ஓங்குதல் என்பதே பொருளாகும்.

அதாவது ஒருவர் உலகப்பற்றைத் துறந்தாரெனில், அவர் அன்பின் வடிவமாகிறார். ஒருவரிடம் அன்பெனும் ஊற்று பிரவாகம் கொண்டுவிட்டால் அவரே நடமாடும் கடவுளாகுவர்.

ஆக பொன், பொருள், சொத்து, சுகம் என அனைத்தையும் துறந்த பட்டினத்தடிகளிடம் அன்பு மிகுந்திருந்தது.

அதாவது கோடானு கோடி சொத்துக்களை நாம் தேடி வைத்திருந்தாலும் காதற்ற ஊசி கூட நம் கடைசி வழிக்கு வராது என்ற உண்மையை மனித சமூகத்துக்குப் பட்டினத்தடிகள் எடுத்துரைத்த உபதேசம் இப்போது நிதர்சனமாய் உணரப்படுகிறது.

எனவே கொரோனாக் காலத்தை அரியசந்தர்ப்பமாகக் கருதி, பொருள் பண்டத்தை பதுக்கவும் விலையை உயர்த்தவும் மனமே நினையாதே!

# வீதியோர மரம் முறிந்து விழுந்ததில் மோ.சைக்கிளில் சென்றவர் படுகாயம்

(நெளுக்குளம்)

வவுனியா கண்டி வீதியிலுள்ள பேயாடி கூழாங்குளம் இராணுவ முகாமிற்கு முன்பாக உள்ள மரம் ஒன்று நேற்று முறிந்து வீழ்ந்ததில் அவ் வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

நேற்று பிற்பகல் வவுனியா கண்டி வீதி பேயாடிக்கூழாங்குளம் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமிற்கு முன்னாலுள்ள மரம் திடீரென்று முறிந்து வீழ்ந்துள்ளது. இதன்போது அவ்வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்தார்.

அவர் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்து குறித்து சம்பவ இடத்திற்கு முன்பாக உள்ள இராணுவ முகாம் படையினர் முறிந்த மரத்தை போக்குவரத்திற்கு இடையூறு இன்றி அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் இவ்விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். (5-4-299)

# செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவில் போதிய பராமறிப்பின்றி வாழும் 112 சிறார்கள்

(பனிக்கன்குளம்)

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் 112 சிறுவர்கள் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதாகவும் அவர்கள் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாகவும் பிரதேச செயலாளர் க.சிவகரன் தெரிவித்துள்ளார்.

செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற சிறுவர் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தாய், தந்தையரின் பராமரிப்பில் இல்லாமல், பிறருடைய பராமரிப்பில் வாழும் 112 சிறுவர் கள் போதிய பாதுகாப்பு அற்ற நிலையில் உள்ளனர்.

இதனால் குறித்த சிறுவர்களை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் சிறுவர் பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள் கண்காணித்து வருகின்றனர்.

அத்துடன், அச்சிறுவர்களுக்கு தேவையான உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (5-4-250)

# வடமாகாண சுகாதார சேவைகள் சாரதிகள் இன்று சுகவீன விடுப்பு போராட்டம்

(வவுனியா)

வடமாகாண சுகாதார சேவைகள் சாரதிகள் சங்கத்தினரால் இன்றும் நாளையும், மாகாணம் தழுவிய ரீதியில் சுகவீன விடுப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

சுகாதார சேவைக்குள் கடைமையாற்றிவரும் சாரதிகளை சுகாதார துறைகள் தவிர்ந்த வேறு திணைக்களங்களிற்கு இடமாற்றம் வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்தே குறித்த சுகவீன விடுப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட வுள்ளது.

இது தொடர்பாக அச் சங்கத்தினர் கருத்துத் தெரிவிக்கும்போது,

நாடளாவிய ரீதியில் எப்பகுதியிலும் இல்லாத நடைமுறை வடக்கு மாகாணத்தில் மாத்திரம் நடைமுறைப் படுத்தப்படுகிறது. கடந்த 35 வருடங்களாக சுகாதார சேவைகள் தவிர்ந்த வேறு திணைக்களங்களுக்கான இடமாற்றங்கள் எமக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. தற்போது 35 வருடங்கள் கழித்து இந்த நடை முறை கொண்டுவரப்பட்டுள்ளது. நாட்டில் 8 மாகாணங்களில் இல்லாத நடைமுறை வடக்கு மாகாணத்தில் மாத்திரம் கொண்டுவரப்பட்டுள்ளமையை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. இது தொடர்பாக அனைத்து தரப்பிலும் எமது கோரிக்கையை முன்வைத்த நிலையில் எமக்கான சரியான தீர்வினை எவரும் வழங்கவில்லை.

எனவே எமது கோரிக்கையை முன்னிறுத்தி வடமாகாணம் தழுவிய ரீதியில் இன்று காலை முதல் சுகவீன விடுப்பு போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதுடன், தற்போது ஏற்பட்டுள்ள கோவிட்-19 பரவல் காரணமாக மக்களினதும், நோயாளிகளினதும் நலன் கருதி அம்புலன்ஸ் வாகன சேவைகள் தவிர்ந்த ஏனைய சேவைகளில் ஈடுபடும் சாரதிகள் குறித்த சுகவீன விடுப்பில் ஈடுபட வுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். (ம-03.299)

# வவுனியாவில் 135 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனை

(வவுனியா)

கம்பஹா மாவட்டத்தில் கொரொனா வைரஸ் தீவிரமடைந்ததையடுத்து முன் எச்சரிக்கை நடவடிக்கைகளிற்காக வவுனியாவில் பல்வேறு பட்ட நபர்களிடம் பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் கண்டி வீதியில் அமைந்துள்ள பிரபல ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் 135 பேருக்கு நேற்றைய தினம் காலை வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் வவுனியா வேலங்குளம் தனிமைப்படுத்தல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள 5பேருக்கும் நேற்றைய தினம் பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டதுடன் பெறப்பட்ட மாதிரிகள் யாழ். மருத்துவ ஆய்வுகூடத்திற்கு அனுப்பிவைக்கப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-03,299)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

நடந்து முடிந்த எதையும் நான் ஒருபோதும் கவனிப்பதில்லை. எதைச் செய்து முடிக்க வேண்டும் என்பதில் மட்டும் கவனமாக இருக்கிறேன். -புத்தர்

## ஆன்மீகச் சிந்தனைகள்

### திருத்திக் கொள்ளுங்கள்

❖ நல்லவர்கள் சொல்லும் குறைகளைத் திருத்திக் கொள்ளவும், மூடர்கள் சொல்லும் குறையை புறக்கணிக்கவும் பழகுங்கள்.

❖ மனிதனாகப் பிறந்த அனைவருக்கும் லட்சியம் இருக்க வேண்டும் இல்லாவிட்டால் மிருகநிலைக்கு தாழ்ந்து விடுவோம்.

❖ படிப்பினால் ஏற்படும் அறிவை விட, அனுபவத்தால் உண்டாகும் அறிவு அதிக பயனைக் கொடுக்கும்.

❖ வெயில் அதிகமாக இருந்தால் மழை வர வாய்ப்பு உண்டாகும். அதுபோல, அநீதி அதிகமாகும் போது பூமியில் மகான்கள் பிறக்கின்றனர்.

# பும்ராவின் பந்துவீச்சு; யாதவின் துடுப்பாட்டம் மிரட்டியது ராஜஸ்தானை

ஐ.பி.எல்.தொடரின் 20 ஆவது லீக் ஆட்டம் அபுதாபியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியை மும்பை இந்தியன்ஸ் எதிர்கொண்டது. டாஸ் வென்ற மும்பை இந்தியன்ஸ் பட்டிங் தேர்வு செய்தது.

அதன்படி, குயின்டான் டி காக், ரோகித் சர்மா ஆகியோர் மும்பை அணியின் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர்.

இருவரும் ஆரம்பம் முதல் சிறப்பாக விளையாடினர். குவிண்டன் டிகாக் 15 பந்தில் 1 சிக்சர் உட்பட 23 ரன் குவித்து வெளியேறினார்.

அடுத்து வந்த சூர்யகுமார் யாதவ் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். கப்டன் ரோகித் சர்மா 23 பந்தில் 3 சிக்சர்கள் உட்பட 35 ரன் எடுத்து ஸ்ரேயாஷ் கோபால் பந்து வீச்சில் வெளியேறினார்.

பின்னர் குர்னால் பாண்ட்யாவுடன் ஜோடி சேர்ந்த சூர்யகுமார் யாதவ் அதிரடியாக ஆடி அணியின் ஸ்கோரை உயர்த்தினார்.

நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய குர்னால் பாண்ட்யா 17 பந்தில் 12 ரன் எடுத்து வெளியேறினார். அடுத்துவந்த ஹர்திக் பாண்ட்யாவுடன் ஜோடி சேர்ந்த சூர்யகுமார் ராஜஸ்தான் பந்து வீச்சை திணறடித்தார். 19 பந்தை சந்தித்த பாண்ட்யா 30 ரன்னிலும், அதிரடியாக ஆடிய சூர்யகுமார் யாதவ் 47 பந்தில் 2 சிக்சர்கள் உட்பட 79ரன் குவித்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.




இதனால், 20 ஓவர் முடிவில் மும்பை இந்தியன்ஸ் அணி 4 விக்கெட் இழப்புக்கு 193 ரன்களை குவித்தது. ராஜஸ்தான் தரப்பில் ஷ்ரேயாஸ் கோபால் அதிகபட்சமாக 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

194 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் தொடக்க வீரர்களாக ஜேய்ஸ்வால் மற்றும் ஜோஸ் பட்லர் களமிறங்கினர். 2 பந்துகளை மட்டுமே சந்தித்த ஜேய்ஸ்வால் ரன் எதுவும் பெறாமல் வெளியேறினார். அடுத்து வந்த கப்டன் ஸ்டீவ் ஸ்மித் 6 ரன்னிலும், சஞ்சுவ் சாம்சங் ரன் எதுவும் பெறாமல் அடுத்தடுத்து வெளியேறினர்.

ஆனால், மறுமுனையில் சிறப்பாக ஆடிவந்த ஜோஸ் பட்டலர் அரைசதம் கடந்தார். அடுத்து வந்த லோம்ரூர் 11 ரன்னில் வெளியேறினார். அதிரடி ஆட்டத்தால் சற்று நம்பிக்கை அளித்த பட்லர் 44 பந்தில் 4 பவுண்டரிகள், 5 சிக்சர்கள் உட்பட 70 ரன்கள் குவித்த நிலையில் பேட்டிசன் பந்து வீச்சில் வெளியேறினார். பின்னர் களமிறங்கிய வீரர்கள் குறைந்த ஆட்டங்களுடன் வெளியேறினார். இறுதியில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 18.1 ஓவரிலேயே அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 136 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதனால், ராஜஸ்தான் ராயல்ஸ் அணியை 57 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி மும்பை இந்தியன்ஸ் அணி அபார வெற்றிபெற்றது. 4 ஓவரில் 20 ரன்கள் மட்டுமே கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தி மும்பை அணியின் பந்துவீச்சாளர் பும்ரா ஆட்ட நாயகனாக தேர்வு செய்யப்பட்டார். (4)

# கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணம் - 2020

## யாழ்.ஜொனியன்ஸ் அணி அரையிறுதிக்கு தகுதி

கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணம்-2020 தொடரின் 2 ஆவது காலிறுதிப் போட்டியும் தொடரின் 18 ஆவது போட்டியும் கடந்த முதலாம் திகதி வியாழக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் யாழ். ஜொனியன்ஸ் அணி ஓல்ட்கோல்ஸ் அணியை 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று அரை இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஓல்ட்கோல்ஸ் அணி 23.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றது. போட்டியில் மதூசன் 27, பிரியலக்ஸன் 36 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் யாழ்.ஜொனியன்ஸ் அணியின் பிருந்தாபன் 3, சன்சஜன், யதூஸன், லவேந்திரா, அபிநாஸ் 1 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்.ஜொனியன்ஸ் அணி 22.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 100 ஓட்டங்களைப்பெற்றது.

போட்டியில் சன்சஜன் 23, ரட்ணம் 43, லவேந்திரா ஆட்டமிழக்காது 16 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் ஓல்ட்கோல்ஸ் அணியின் பிரியலக்ஸன் 2, ஜிந்துஸன், நிரோஸன் 1 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழக 11ஆவது ஆண்டாக நடத்தும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்விற்கு ஓல்ட்கோல்ஸ் அணிக்கு 1.46 புள்ளிகளும் யாழ்.ஜொனியன்ஸ் அணிக்கு 5.50 புள்ளிகளும் கிடைக்கப் பெற்றுள்ளது (4)

# கொரோனா அச்சுறுத்தல்

## தேசிய விளையாட்டு விழா பிற்போடப்பட்டது

நாட்டில் தற்போது மீண்டும் கொரோனா அச்சுறுத்தல் அதிகரித்து வருகின்ற காரணத்தினால் நாளை மறுதினம் 10 ஆம், 11 ஆம் திகதிகளில் கதிர்காமத்தில் நடத்தப்படவிருந்த மரதன் ஓட்டப் போட்டி, வேக நடை போட்டி மற்றும் சைக்கிளோட்டப் போட்டி என்பன பிற்போடப்பட்டுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இளைஞர் சேவைகள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் விளையாட்டுத் துறை அபிவிருத்தி திணைக்களம் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட 46 ஆவது தேசிய விளையாட்டு விழா எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

இதற்கு முன்னதாக நாளை மறுதினம் 10, 11 ஆம் திகதிகளில் மரதன் ஓட்டப் போட்டி, வேகநடைப் போட்டி மற்றும் சைக்கிளோட்டப் போட்டி உள்ளிட்ட ஏனைய போட்டிகளும் நடத்த ஏற்பாடாகியிருந்தன.

எனினும், தற்போது நாட்டில் மீண்டும் அதிகரித்துள்ள கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இப்போட்டிகள் அனைத்தையும் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (4)

# பெண்களுக்கான நீளம் பாய்தல் போட்டி

## கரவெட்டி பிரதேச செயலக வீராங்கனை வெள்ளிப் பதக்கம்

யாழ்.மாவட்ட மட்ட பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட கழக வீரர்கள் பங்கு பற்றிய பெண்களுக்கான நீளம் பாய்தலில் கரவெட்டி பிரதேச செயலகத்தை சேர்ந்த சி.ஆரணி வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றினார்.

இவர்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் பெண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் கரவெட்டி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சி.ஆரணி 4.68 மீற்றர் தூரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றினார்.

இவர் 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற பெண்களிற்கான நீளம் பாய்தல் போட்டியில் 5.36 மீற்றர் தூரம் பாய்ந்து புதிய சாதனையைப் பதிவு செய்து இன்று வரைக்கும் எவராலும் முறியடிக்க முடியாமல் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (4-60)

# ஆப்கான் கிரிக்கெட் வீரர் நஜீப் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தானின் பிரபல கிரிக்கெட் வீரர் வீதி விபத்தில் உயிரிழந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஜலதாபாத் நகரில் இடம்பெற்ற கார் விபத்தில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில், தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வாரியம் இந்த தகவலை தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளது. அதிரடியாக ஆடக்கூடிய நஜீப் தரகாய் உயிரிழப்பு ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு மிகப்பெரும் இழப்பு எனவும் இரங்கல் செய்தியை அந்நாட்டு கிரிக்கெட் வாரியம் வெளியிட்டுள்ளது. (4)



# புவனேஷ் அணியிலிருந்து விலகல்

ஐ.பி.எல். தொடரில், ஐதராபாத் அணிக்காக விளையாடி வந்த வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர் குமார் காயம் காரணமாக அணியில் இருந்து விலகியுள்ளார்.

கடந்த 2 ஆம் திகதி நடைபெற்ற போட்டியில், சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிகள் மோதின. இப்போட்டியின் 19 ஆவது ஓவரை புவனேஷ்வர் குமார் வீசிய நிலையில் முதல் பந்தை வீசும்போது அவரது கணுக்காலில் சற்று வலி ஏற்பட்டது.

இதையடுத்து, சிகிச்சை எடுத்த பின் தொடர்ந்து பந்து வீச முயன்ற போது அவரால் தொடர்ந்து பந்து வீச முடியாமல் அந்த போட்டியில் இருந்து வெளியேறினார்.

அதன்பின் கணுக்கால் மற்றும் இடுப்பு பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக அவரால் தொடர்ந்து விளையாட முடியாத சூழல் ஏற்பட்டுள்ளதன் காரணமாக, அவர் ஐ.பி.எல். தொடரில் இருந்து விலகியுள்ளார். (ஜ-4)

## திட்டமிட்ட திகதி...

அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தற்போது நாட்டில் மீண்டும் கொரோனா அச்சுறுத்தல் தலைதூக்கியுள்ள நிலையில் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி பரீட்சை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஒரு பரீட்சார்த்திக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருந்தாலும் அவருக்கு தனியாக ஒரு பரீட்சை மண்டபம் தயார் செய்து பரீட்சை எழுத வாய்ப்பு அளிக்கப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் இதன்போது தெரிவித்தார்.(ம-3)

## மகனைத் தேடி...

சேர்ந்த பெரியசாமி மனோன்மணி (வயது - 70) என்ற தாயே நேற்றையதினம் மரணமடைந்துள்ளார்.

இவரது மகன் பெரியசாமி செல்வகுமார் வயது 45 கடந்த 2008ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டிருந்தார்.

அவரைத் தேடி வவுனியாவில் 1328 நாட்களாக முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டத்திலும் குறித்த தாய் கலந்து கொண்டு தனது மகனை கண்டுபிடித்து தர போராடிய நிலையில் மகனைக் காணாமலேயே அவர் நேற்று மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,250,299)

## இலங்கை பௌ...

எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

சிங்கள தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பான அரசியல் கேள்வி - பதில் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

சுமந்திரன் இந்த கருத்தை வெளியிடும்போது குறுக்கிட்ட தொலைக்காட்சியின் ஊடகவியலாளர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தனது வாக்கு வங்கி வீழ்ச்சியடையும் என்ற காரணத்தினால், இதனைக் கூறுகிறாரா எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதற்கு பதிலளித்த சுமந்திரன் இலங்கை தான் இந்து நாடு என்றும் கூறவில்லை எனவும் அதேபோல் பௌத்த நாடு என்றும் ஏற்றுக் கொள்ளவில்லை எனவும் கூறியுள்ளார்.

இலங்கை பெரும்பான்மையாக பௌத்தர்கள் வாழும் நாடு என்ற போதிலும் நாட்டை பௌத்த நாடு என்று ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் தெரிவித்துள்ளார். (ம-3)

## யாழில் நேற்றும்...

தாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தின் பல பிரதேசங்களிலுமிருந்து அனுப்பி வைக்கப்பட்ட 213 பேருக்கான மாதிரிகளில் குறித்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3,18)

## கல்கந்த தனிமை...

மகளுக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதையடுத்து தனிமைப்படுத்தல் மையத்திற்கு குறித்த பெண் கொண்டு செல்லப்பட்டார்.

தனிமைப்படுத்தல் மையத்திற்கு சென்ற 10 நிமிடங்களில் அந்தப் பெண் இறந்து விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர் கொரோனாவினால் பாதிக்கப்பட்டிருந்தாரா? என்பது இன்னும் உறுதிசெய்யப்படவில்லை. (ம-3)

## கூட்டமைப்பின்...

பட்டுள்ளது.

கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர், பேச்சாளர், பிரதம கொறடா ஆகிய பதவிகளைத் தீர்மானிக்கும் நோக்கில் நேற்று கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுக் கூட்டம் இடம்பெற்றது.

எனினும் பேச்சாளர், பிரதம கொறடா ஆகிய பதவிகளுக்கான தேர்வு இடம்பெறாமல் காலவரையறையின்றி கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 10 பாராளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்ற நேற்றைய கூட்டத்தில் முதலில் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் தேர்வுக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோது அதன் தலைவராக இரா.சம்பந்தன் மீண்டும் ஏகமனதாகத் தேர்வு செய்யப்பட்டார். இதையடுத்து இரண்டாவதாக கூட்டமைப்பின் பேச்சாளர் தேர்வுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இதன்போது கூட்டமைப்பின்தற்போதைய பேச்சாளரான எம்.ஏ.சுமந்திரன், "நான் ஐந்து வருடங்களாகத் தொடர்ச்சியாகப் பேச்சாளர் பதவியை வகித்துள்ளேன்.

எனவே சுழற்சி முறையில் இருக்க வேண்டும் என எண்ணி இந்தப் பதவிக்கு சி.சிறீதரனின் பெயரை முன்மொழிகின்றேன்" என்று தெரிவித்தார். இந்தத் தேர்வை இ.சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. வழிமொழிந்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம், "பேச்சாளர் பதவியை ரெலோவுக்கு வழங்க வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

இதன்போது, "பேச்சாளர் பதவி கட்சிக்கு மட்டுமே உரியது. ஆனால் பாராளுமன்ற ரீதியிலான பதவிகளில் ஒன்றான குழுக்களின் பிரதித் தலைவர் பதவி கடந்த ஆட்சியில் தனித்து ரெலோவிடமே வழங்கப்பட்டது. அப்போது பங்கிட எவரும் கோரவில்லை" என்ற கருத்து தமிழரசுக் கட்சி எம்.பிக்கள் சார்பில் முன்வைக்கப்பட்டது.

அத்துடன், பேச்சாளர் பதவி ரெலோவுக்கு வழங்க முடியாது எனவும் குறித்த எம்.பிக்களினால் தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில் சமரசம் செய்ய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் முயன்றபோது ரெலோவுக்கு வழங்க முடியாது என உறுதியான கருத்து நிலவியதால் திகதி குறிப்பிடப்படாது கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. (ம-3)

## வாள்வெட்டுக்...

றுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

வாள்கள், கம்பிகளுடன் வந்த 4 பேர் கொண்ட கும்பல் வீட்டில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனங்கள் மீதும் வீட்டிலிருந்த பொருட்கள் மீதும் தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இணுவிலில் உள்ள வீட்டுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில் நேற்று ஓட்டுமட வீட்டுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3)

## ஆடைத் தொழிற்...

எண்ணிக்கை 1028 ஆக அதிகரித்துள்ளது.

முன்னதாக நேற்று முன்தினம் 729 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, கம்பஹா மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் மேலும் பல பொலிஸ் பிரிவுகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. (ம-3)

## மருத்...

வாங் கொட ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு சிகிச்சையளித்த பின்னர் அவருக்கு தொற்று ஏற்பட்டிருக்கலாம் என மருத்துவமனையின் துணை இயக்குநர் வைத்தியர் பிரியந்த இலெபெரும தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றுடன் ஆடை தொழிற்சாலையின் ஊழியர்கள் கண்டறியப்பட்டதை அடுத்து மினுவாங்கொடவில் வைரஸ் பரவல் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், தொழிற்சாலையைச் சேர்ந்த ஒரு குழுவினருக்கு தனது தனியார் கிளினிக்கில் குறித்த மருத்துவர் சிகிச்சை அளித்ததாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதையடுத்து, பாதிக்கப்பட்ட மருத்துவரை தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வைத்தியர் பிரியந்த இலெபெரும தெரிவித்துள்ளார். (ம-3)

## 384 பேர்...

மைப்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

மினுவாங்கொட ஆடை தொழிற்சாலையில் பணியாற்றிய நிலையில் யாழ். புங்குடுதீவுக்கு வந்திருந்த இரு பெண்களில் ஒரு பெண் கொரோனா தொற்றுக்குள்ளானார்.

இதேவேளை மற்றைய பெண் தொடர்ந்தும் தனிமைப்படுத்தலில் இருந்து வருகின்றார்.

இந்நிலையில் தனிமைப்படுத்தலில் உள்ள பெண் பிறந்தநாள் நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டிருந்த நிலையில் அவருடன் அந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்த 384 பேர் நேற்று தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றனர். ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இது மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 07-10-2020 சீட்டிழுப்பு இலக்கம் 1061
R 7 0 5 8 3 7

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 07-10-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2563
T 08 23 60 77

மஹஜன சம்பத
திகதி 2020/10/07
சீட்டிழுப்பு இலக்கம் 4268
V 5 9 1 7 6 7

மெகா பவர்
திகதி 07/10/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0635
A 01 59 70 73 77

செவன
திகதி 07/10/2020
சீட்டிழுப்பு இலக்கம் 302
T 02 16 61 62

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1696
சீட்டிழுப்பு திகதி 07/10/2020
வெற்றி இலக்கங்கள் 11 21 50 63 H
ரூ. 54,725,892
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 1064
வர்ணம்: இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2020.10.07
இன்றைய ஜக்போட் பரிசு ரூ. 76,351,005/-
வெற்றி இலக்கங்கள் 17 24 47 68 S
ரூ. 500/- 6663
ரூ. 100/- 578

சனிதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2020.10.07
சீட்டிழுப்பு இல.: 3394
வர்ணம்: ஊதா
இன்றைய ஜக்போட் பரிசு ரூ. 44,570,661.40
வெற்றி இலக்கங்கள் 14 33 54 74 S
ரூ.500/- 1160

ராசி
திகதி 07/10/2020 வெற்றி வாரம் 2945
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 03 13 19 25
ரூ.500 5808
ரூ.100 494
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,329,880

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1238 நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 07.10.2020 தினம் புதன்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
E 09 16 29 34
52,623,069.20
SUPER 500 1 2 8 0

# கொரோனா வைரஸ் அச்சுறுத்தலுக்குள் அரசியலமைப்புத் திருத்தம் வேண்டாம்

## முன்னாள் சபாநாயகர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாடு மீண்டும் கொரோனா வைரஸ் பரவலால் நெருக்கடிக்கு உள்ளாகக்கூடிய அச்சுறுத்தல் காணப்படும் வேளையில், அரசியலமைப்புத் திருத்தங்களை ஏற்படுத்தல் அல்லது அதனையொத்த வேறு அரசியல் காரணிகளை மையப்படுத்தி நேரத்தை விரயம் செய்துகொண்டிருப்பது பொருத்தமானதல்ல என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அண்மையில் மீண்டும் கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்திருப்பது அசாதாரணமான விடயமாகும். தற்போதைய சூழ்நிலையில் மக்களால் முறையான சுயசுகாதாரப்பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்படாத பட்சத்தில், கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் ஊரடங்குச்சட்டம் உட்பட வேறு எந்தவொரு பாதுகாப்பு நடைமுறைகளும் பயன்தராது. எனவே அனைவரும் இதனை அலட்சியம் செய்யாமல் உரிய சுகாதாரப்பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றார் (ம-03)

# ஆடைத் தொழிற்சாலையில் இந்தியர்களால் கொரோனா பரவவில்லை - சவேந்திர சில்வா

(கொழும்பு)

கம்பஹா மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் இருந்து கோவிட்- 19 வைரஸ் பரவலுக்கும் இந்தியர்களுக்கும் தொடர்புண்டு என குறிப்பிடப்படும் விடயத்தில் எவ்வித உண்மைத்தன்மையும் கிடையாது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கம்பஹா மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் இருந்து பரவிய கோவிட்-19 வைரஸ் தாக்கத்தை முழுமையாக கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலையில் ஏற்பட்ட கோவிட் -19 பரவல் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த ஆடைத்தொழிற்சாலையில் இருந்து பரவிய கோவிட்-19 தொற்றுக்கும், இந்தியர்களுக்கும் இடையில் தொடர்பு உண்டு என குறிப்பிடப்படும் செய்தியில் எவ்வித உண்மைத்தன்மையும் கிடையாது. இவ்விடயம் தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

வைரஸ் தொற்று பரவலை கண்டறிவது இலகுவான காரியமல்ல. ஒரு கட்டத்தில் கோவிட்-19 வைரஸ் தொற்றாளர் அடையாளம் காணப்படும்போது அவர்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்படுகிறது.

ஆகவே நிலைமையினை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகிறது.

இதேவேளை கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியிருப்பதாக உறுதி செய்யப்பட்ட தமது ஆடைத் தொழிற்சாலையைச் சேர்ந்த பலருக்கு ஆரம்பத்திலேயே தொற்று ஏற்பட்டமைக்கான எவ்வித முன்னறிகுறிகளும் தென்படவில்லை என்று பிரெண்டிக்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்தியா அல்லது வேறு நாட்டைச் சேர்ந்த எவரும் தமது தொழிற்சாலைக்கு வருகை தரவில்லை என அந்நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-03)


NEW SCIENCE HALL
கன்னாதிட்டி வீதி - யாழ்ப்பாணம்
நிகழ்நிலை வகுப்புக்கள்
ONLINE CLASSES
எமது கல்வி நிறுவனத்தின் நேரடிக் கற்பித்தல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.
கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் Zoom செயலி மூலம் மீண்டும் ஆரம்பமாகவுள்ளது.
இதில் ஏற்கனவே எமது கல்வி நிறுவனத்தில் கற்றுவந்த சகல மாணவர்களும் இணைந்து கொள்ளலாம்.
அலுவலக நேரத்தில் ( 9.00 a.m முதல் 4.00 p.m வரை ) கல்வி நிறுவன அனுமதி அட்டையுடன் வந்து பதிவுகளை மேற்கொள்ளவும்.
இரா. அருட்செல்வன்
- நிர்வாகி -
(C-490)



மணமகள் தேவை
இலங்கையில் பிறந்து Switzerland இல் நிரந்தரமாக வசிக்கும் யாழ். இந்து கௌரவ குடும்பப் பெற்றோர் தமது 48 வயதுடைய சுயதொழில் புரியும் மகனுக்கு நற்பண்புள்ள, அழகிய மணப் பெண்ணைத் தேடுகிறார்கள். மணமகளின் ஜாதகம் மற்றும் சமீபத்திய புகைப்படம் மற்றும் ஏனைய விபரங்களுடன் பின்வரும் மின்னஞ்சலுடன் தொடர்பு கொள்ளவும். (4204)
Jeyaratnam1988@gmail.com 077 219 4331



வேலையாட்கள் தேவை
◆ உதவியாளர் ( Sales வாகனம் )
◆ பணம் வசூலிப்பவர் ( Sales வாகனம் )
(4201)
யாழ்ப்பாணம், திருநெல்வேலி, கோண்டாவில், கொக்குவில், இருபாலை, புத்தூர், சிறுப்பிட்டி, ஆவரங்கால் ஆகிய இடங்களில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
077 009 0189



பொது அமைப்புக்களுக்கான அறிவித்தல்
தங்கள் அமைப்புக்களால்
வலம்புரி - சங்குநாதம்
நாளிதழுக்கு அனுப்பி வைக்கின்ற அறிக்கைகள், செய்திக் குறிப்புகள், கட்டுரைகள், புகைப்படங்கள் ஆகியவற்றை
E-mail : Valampurii@yahoo.com
Viber : 076 636 3378
என்பவற்றுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
தனிப்பட்டவர்கள் ஊடாக அனுப்பி வைக்கப்படும் எந்த விடயமும் உறுதிப்படுத்தப்படாதவையாகவே கருதப்படும் என்பதால், குறித்த அமைப்புக்களின் அங்கீகரிக்கப்பட்ட தகவல் பரிமாற்றத்தினூடாக அனுப்பப்படுகின்ற விடயங்களே கவனத்தில் எடுத்துப் பிரசுரிக்கப்படும்.
நிர்வாகம் - வலம்புரி
மேலதிக தொடர்புகளுக்கு
076 097 3128, 021 222 3378



பௌதிகவியல் வகுப்புக்கள்
Online
உயர்தர மாணவர்களுக்கான பௌதிகவியல் பாடம் கற்பிக்கப்படும்.
ஆசிரியர் RAMANAN
B.Sc (Hons.) in Physics, M.Sc (Reading)
(4400)
077 647 0614



வேலை வாய்ப்பு
விளம்பரத்துறையில் துண்டுப்பிரசுரம் விநியோகம் மற்றும் பனர் கட்டுதல் போன்ற வேலைகள் செய்ய ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்
நாள் சம்பளம் 1000/=
(30 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது)
(C-308)
0768226244



உடனடி வேலை வாய்ப்பு
கணக்கு உதவியாளர்
நிறுவனம் தொடர்பாக போக்குவரத்து செய்யக்கூடியவரும் கணக்கியல் சார்பான போதிய அறிவும் அனுபவமும் இருத்தல் அவசியம்.
சம்பளம் 30'000/=
(40 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது)
(C-308)
777 069 777



BIOLOGY
◆2021 - PAPER CLASS
◆அலகுரீதியான மீட்டல்
◆ROYAL EXAM CENTER இன் மாதாந்தப் பரீட்சைகள்
(4120)
By. K. Sutha B.Sc. with Ed.
T.P : 077 401 2800



Physics & Chemistry
PERSONAL CLASSES
Batch 2021, 2022
(4205)
மிகக் குறுகிய காலப்பகுதியில் அனைத்துப் பாடப்பரப்புகளும் கற்பிக்கப்படும்.
T.P : 076 251 5760



அமெரிக்க லொத்தர் விசா
பதிவுகள் ஆரம்பம்
08-10-2020
நீங்களும் இந்த ஆண்டு அமெரிக்க லொத்தர் விசா அதிஸ்டசாலி ஆகலாம்.
இறுதி நேர ஏமாற்றத்தினை தவிர்த்திட
உடனடியாக கடவுச்சீட்டினை எடுத்து வைத்துக்கொள்ளுங்கள்
(C-308)
என்றும் உங்கள் மீது அக்கறையுடன் V2 TRAVELS
0768226244



விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
பிரான்ஸ் / ஜெர்மனி
நெதர்லாந்து / சுவிஸ்
1150/= Kg
0768226240
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம்
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-308)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.